பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 10 சனிக்கிழமை 24.06.2023 கதிர் 225

# இனப்படுகொலை குறித்த கனடாவின் நிலைப்பாட்டை எதிர்த்து போராட்டம்

## கொழும்பு, மட்டக்களப்பில் முன்னெடுப்பு



இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற கனடா பிரதமர் ஜஸ்டின் ரூடோ இலங்கை தொடர்பில் வெளியிட்ட அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலுள்ள கனேடிய உயர்ஸ்தானிகரகத்துக்கு முன்னால் சிங்கள ராவய நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, இலங்கை இராணுவம் போர்க்குற்றத்தை இழைக்கவில்லை. விடுதலைப் புலிகளே போர்க்குற்றத்தை இழைத்துள்ளனர். ஆகவே அதற்கு சர்வதேச விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்று குரல் எழுப்பப்பட்டது. இதையொத்த ☞ 2

## இது ரகசியம் அல்ல!

கட்சிகளைப் பிளப்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வல்லவர் என்றொரு கருத்து திடமாக இருக்கின்றது. அமைதிப் பேச்சுக் காலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைக்கூட இரண்டாகப் பிரித்தார் என்ற விமர்சனங்களும் அவர் மீது உண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்ததிலும் அவரது கைங்கரியம் உண்டு என்று சொல்லப்படுகின்றது. அண்மையில் வடக்கில் ஒரு சீனத் தொழிற்சாலையை உருவாக்கும் விடயத்தில் புதிய கூட்டணிக்குள் பிளவை உருவாக்கும் வகையில் அந்தத் திட்டத்திற்கு ஆதரவளித்த கட்சிக்கு ஆளுக்குத் தலா 50 லட்சம் ரூபா வழங்கப்பட்டது என்றுகூட கதைகள் உலாவுகின்றன. இதன் மூலம் அந்தக் கூட்டணிக்குள் அந்தக் கட்சி கொண்டிருந்த தலைமைத்துவக் கனவையும் சீரழித்துவிட்டார் ரணில்.

இப்போது எல்லாம் முடிந்து மொட்டுக் கட்சியைப் பிளவுபடுத்தும் பணியைத் தொடங்கியிருக்கிறார் அவர் என்றும் தகவல். அண்மையில் மொட்டுக் கட்சி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடந்த கலந்துரையாடலின்போது, அந்தக் கட்சியைப் பிளவுபடுத்தும் ☞ 2

## தீர்ப்பு ஒத்திவைப்பு

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனினால் சமர்ப்பிக்கப்பட்ட ரிட் மனு மீதான தீர்ப்பை எதிர்வரும் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

செயற்பாட்டாளர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்தபோது ஒரு கோடியே எழுபது இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் கண்டுபிடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் தமக்கு எதிராக கோட்டை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாட்டை இரத்துச் செய்யுமாறு கோரி தேசபந்து தென்னகோன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த தீர்ப்பு நேற்றையதினம் ☞ 2

## வேட்புமனு இரத்து தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசித் தீர்மானம்

### இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்து செய்யும் யோசனை தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ஜனகவக்கும்புர கூறுகின்றார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இது தொடர்பான யோசனைகளை முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வேட்புமனுக்களை இரத்துச் செய்வது தொடர்பான யோசனை நாடாளுமன்ற தெரிவுக் குழுக்களினூடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், நாடாளுமன்ற விசேட கட்டளைகள் சட்டமூலத்தின் ஊடாகவே உள்ளூராட்சி மன்றதேர்தலுக்கான வேட்புமனுக்களை ☞ 2

## இளம் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

இளம் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச்சம்பவம் கம்பஹா மாவட்டம், திவுலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று (23) மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பிரதேசத்தில் மசாஜ் நிலையத்தை நடத்தி வரும் நபரே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஒரு பிள்ளையின் தந்தையான 28 வயதுடைய எஸ்.சஞ்சீவ என்ற நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் வீட்டு வாசலில் வைத்துக் கைத்துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே அவரைச் சுட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர் என்று சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வரும் பொலிஸார் தெரிவித்தனர்.

## தமிழ் அரசியல் கைதி தேவதாஸ் விடுதலை!

சிறையில் பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதியான தேவதாஸ் கனகசபை ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின்கீழ் நேற்று விடு தலை செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது, கடந்த 2008 ஆண்டு கைது செய்யப்பட்டு அரசியல் கைதியாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள தேவதாஸ் கனகசபை கடும் நோயால் பாதிக்கப்பட்டிருப்பதால் அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரிக்கை ☞ 2

## நுகர்வோர் சட்டத்தையும்கூட திருத்த ஆட்சியாளர்கள் முடிவு

பொதுமக்களை; பாதுகாக்கும் நோக்கில் 20 வருடங்கள் பழமையன நுகர்வோர் சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ளவிருப்பதாகவும் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

'ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துதெரிவிக்கும் போதே வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் அமைச்சர் நளின் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

'ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டைபொறுப்பேற்றுக்கொண்டபோது நாடு பெரும் நெருக்கடிகள் ☞ 2

## மனோ, திகா, ராதா ஆகியோர் அரசுடன் சேர்ந்தால் மகிழ்ச்சி

### அமைச்சர் கஞ்சன அழைப்பு



'தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர்களும் அரசுடன் இணைந்தால் மகிழ்ச்சி. மனோ கணேசன், திகாம்பரம், இராதாகிருஷ்ணன் ஆகியோரை வரவேற்பதற்குநாம் தயாராகவேஇருக்கின்றோம்.'

இவ்வாறு அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'எதிர்க்கட்சித் தலைவரிடம் தூரநோக்கு சிந்தனை கிடையாது. அவரால் உபதேசம் மட்டுமே வழங்கிக்கொண்டிருக்க முடியும். எதிரணியில் உள்ளவர்கள் அரசுடன் இணைவார்கள். அதற்கான சுபநேரம் வரும் வரை காத்திருக்கின்றனர். சஜித் தலைமையின் கீழ் எதிர்காலம் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும்.

மனோ கணேசன், திகாம்பரம், இராதாகிருஷ்ணன் போன்றவர்கள் அரசுடன் இணைவதற்கு நாம் எதிர்ப்பு இல்லை. அவர்கள் வரவேண்டும்.' - என்றார்.

## கொழும்பில் பயங்கரம்

## தமிழ்க் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

கொழும்பில் தமிழர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கொழும்பு, கொலன்னாவைப் பிரதேசத்தில் நேற்று (23) மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 45 வயதுடைய சுப்பிரமணியம் தயாபரன் என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் முகமூடி அணிந்து வந்த இருவர், கூரிய ஆயுதத்தால் அவரைச் சராமரியாக வெட்டிவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

இரத்த வெள்ளத்தில் கிடந்த அவரை அயலவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதிலும் அவர் ☞ 2

## பொருளாதார மறுசீரமைப்பு முன்னெடுக்கப்படுகின்றது

### பிரான்ஸில் ஜனாதிபதி தெரிவிப்பு



இலங்கை தற்போது வரையறுக்கப்பட்ட நிதி வசதிகள் தொடர்பிலான பிரவேசத்திற்குள் மட்டுப்பட்டு இருப்பதோடு, நாட்டில் நிதி மற்றும் பொருளாதார மறுசீரமைப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பெரிஸ் நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமான புதிய நிதி ஒப்பந்தத்திற்கான அமர்விற்கு இணையாக நடைபெற்ற உயர்மட்ட கலந்துரையாடலொன்றில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலின் போது ☞ 2

## இலங்கையின் மறுசீரமைப்புக்கு அமெரிக்காவும் ஒத்துழைக்கும்

### அந்நாட்டு திறைசேரியின் செயலாளர் ஜெனட் யெலன் உறுதி

இலங்கையின் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஐக்கிய அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஜெனட் யெலன் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவிடத்தில் உறுதியளித்துள்ளார்.

புதிய நிதி ஒப்பந்தத்திற்கான தலைவர்களுக்கான மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரான்சிற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க மற்றும் ஐக்கிய அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஜெனட்யெலன் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

சர்வதேசநாணயநிதியத்துடனான வேலைத்திட்டம் இலங்கையில் நடைமுறையிலிருக்கும் அபிவிருத்தி வேலைத்திட்டம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

நிதி மற்றும் கடன் வழங்கல் மூலம் இலங்கையின் நிலையான அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு ஐக்கிய அமெரிக்காவழங்கிவருகின்ற ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, திறைசேரியின் செயலாளர் என்ற வகையில் யெலன் வழங்கிவரும் ஒத்துழைப்பிற்கும் நன்றி தெரிவித்தார்.

சர்வதேசநாணயநிதியத்துடனான இலங்கையின் வேலைத்திட்டத்தின்முன்னேற்றங்கள்தொடர்பில்ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஐக்கிய அமெரிக்க திறைசேரியின் செயலாளருக்கு விளக்கமளித்தார்.

கடன் மறுசீர ☞ 2

## குறைபாடுகளைத் தீர்க்கலாம் திட்டத்தை நிறுத்த முடியாது

### 'அஸ்வெசும' திட்டம் குறித்து பதில் அமைச்சர் கருத்து

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் வெளிப்படைதன்மையுடன் முன்னெடுக்குமாறு சர்வதேச நிதி நிறுவனங்கள் வலியுறுத்தியுள்ளதாக பதில் நிதியமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். அதனடிப்படையில், அஸ்வெசும நிவாரண திட்டம் ☞ 2

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடன் தரவேண்டும்

### எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தங்கள் உயர் கல்வியை தொடர்வதற்கு தேவையான வட்டியில்லா கடன் வசதியை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றையதினம் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

பல்கலைக்கழக ☞ 2

## இனி இது .....

நோக்கம் எதுவும் தனக்கு கிடையாது என்று தடீரென ஞானம் வந்தவர்போன்று தெரிவித்திருக்கிறார். தமது கட்சித் தலைமைக்குத் தெரியாமல் இப்படிமொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைப்பது, மாவட்டஅமைப்பாளர்களை அழைப்பது போன்றவற்றுக்கு கட்சிச் செயலர் சாகர காரியவாசம் கடும் விமர்சனத்தைமுன்வைத்தபோது ஜனாதிபதிஇந்தக்கருத்தைத் தெரிவித்தார்.

ஆனால், களநிலவரம் அதற்குரியதாக இல்லை என்கின்றன கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள். மொட்டுக் கட்சிக்குள் இருந்தவர்களில்பலர், முக்கியமாக அமைச்சர்களில் பலர் ஏற்கனவே ரணில் பக்கம் சாய்ந்துவிட்டார்கள். இலங்கையைப்பொருத்தவரையில் ரணிலின் கொள்கைதான் சரி என்று தமது சகாக்களுக்குப்போதிக்கவும் அவர்கள் தவறவில்லை. ரணில் விரும்பினால் அவர்கள் எல்லோரும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்கும் தயாராகவே இருக்கின்றார்கள். ஆனா லும் அவர்களைத் தனதுகட்சியில்இணைத்துக் கொள்ளாமல் அவர்களைக் கொண்டு மற்றொரு அரசியல் முன்னணியை உருவாக்குவதில்ஜனாதிபதி கவனம் செலுத்துகின்றார் என்கிறன கொழும்பு இராஜதந்திர வட்டாரங்கள்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு வழங்கப்பட்டிருந்த ஸ்டன்மோர் கிரசன்ட்ட வீதியில் அமைந்திருந்த வீடு இந்தப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அது மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஸாவசம்ஒப்படைக்கப் பட்டிருக்கின்றதாம். லன்ஸா அங்கிருந்து தனித்துப் பணியாற்றவில்லை. தன்னுடன் அமைச்சர் பிரசன்னா மற்றும் காஞ்சன விஜய சேகரவையும்துணைக்குச்சேர்த்துள்ளார். கிரஸன்ட் வீட்டில் ஒருஅறையைத்தான்வைத்துக்கொண்டு மற்றைய இரு அறைகளையும் அமைச்சர் பிரசன்னவுக்கு வழங்கியிருக்கிறார்.

அந்த வீட்டில்இருந்தபடி புதிய முன்னணி ஒன்றை உருவாக்குவதற்கான பணிகள்மும்முரமாகநடைபெற்று வருகின்றனவாம். எப்படியும் அடுத்ததேர்தலுக்குமுன்னர் மொட்டுவைஒருகைபார்க்காமல் விடமாட்டார்போலும் ரணில்!

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## இனப்படுகொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதாதைகளயும்ஆர்ப்பாட்டக்காரர்கள்தாங்கியிருந்தனர்.

இதன்போது, கனடிய உயர்ஸ் தானிகரகத்துக்கு முன்னால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததோடு கலகமடக்கும் பொலிஸார், தண்ணீர்த்தரை வாகனம் என்பகவம் தயார் நிலைமயில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கனேடிய அரசாங்கத்தின் செயற்பாட்டைக் கண்டித்து மட்டக்களப்பு மாவட்டத்தின் குறிப்பாக ஓட்டமாவடி, வாழைச்சேனை பகுதிகளில் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டதோடு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமும் மேற்கொள்ளப்பட்டது.

நேற்றுக் காலை 6 மணி தொடக்கம் பகல் 12 மணி வரையான காலப்பகுதியில் அங்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதோடு, கனடிய அரசாங்கத்திற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக பிரதான இடங்களில் கறுப்பு கொடிகள் மற்றும் பதாதைகள் ஆகியனகாட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

குறித்த பதாதைகளில் இலங்கை ஒருஇறைமை கொண்ட நாடு இந்த விடயத்தை கனேடிய அரசு புரிந்து கொள்ள வேண்டும். கனடா உங்கள் சொந்த தொழிலை கவனியுங்கள் நிம்மதியாக வாழ இலங்கையரை விடுங்கள். உள்ளே விளையாட வேண்டாம். கனடிய அரசாங்கமே இலங்கையர்களை நிம்மதியாக வாழ அனுமதிபோன்றவாசகங்கள் எழுதிய பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டன. அத்துடன் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் கண்டனக் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில். கனடிய பிரதமரால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் தமிழ் மக்கள் மீது இனப்படுகொலைநடைபெற்றதாகவும், அது குறித்து சுயாதீனமான விசாரணை மேற்கொள்ளப்பட்டுபொறுப்புக் கூறல் நடவடிக்கை இடம் பெறவேண்டும்தமிழ்மக்கள் சார்ந்து கருத்துக்களை பகிர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வேட்புமனு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரத்து செய்ய முடியும்.

தமதுபணிளைமுன்னெடுத்து செல்வதில் வேட்பாளர்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமத்தைகருத்திற்கொண்டு இந்தநடவடிக்கைஎடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடிய பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப் படவுள்ளன என்றார்.

## பொருளாதார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைத்துவம்வழங்கிய ஸ்பானிய பிரதமர் நாதியா கெல்வினோவால்ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவிடத்தில், ஜனாதிபதியவர்களே, நீங்கள் தற்போது விசேடமான ஒரு நிலைப்பாட்டில் உள்ளீர்கள். நாம் தற்போது நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் பற்றி அவதானம் செலுத்துவோம். இங்கு பல்வேறு சவால்கள் உள்ளன. அதே போல் அவை பொதுவான நிலைமைகளால்உருவானது அல்ல. சாட் குடியரசின் நிலைமையைப் போன்றே உங்களது நிலைமையை ஒப்பிடலாம். அதேபோல் பெரிஸ்சமவாயம்மற்றும்அதன் உறுப்பினர்கள் அல்லாத கடன் வழங்குநர்களின் குழுவொன்றை உருவாக்குதல், போன்ற கடன் வழங்குநர்களின் குழுக்களில் இணை தலைமைத்துவத்தை வகிக்க இந்தியா தீர்மானித்துள்ளமையும் முக்கியமான விடயங்கள் என சுட்டிக்காட்டலாம். மறுசீரமைப்புச் செயற்பாடுகள் பற்றிய உங்களுடைய கருத்துஎன்ன?என்றகேள்வி எழுப்பினார்.

அத்துடன், சாட் குடியரசு ஜனாதிபதியின் உரையில் அதிகாரிகள்வாதத்தைமட்டுப்படுத்த வேண்டும் என்பது தெரிகிறது. அதற்குநாங்களும் இணக்கம் தெரிவிக்கிறோம். கடுமையானவிடயங்களுக்கு தீர்வுகாணஎளிமைத்தன்மை மிகவும்அவசியமானது. அது பற்றிய உங்களது அனுபவம் எப்படியிருக்கிறது என்றும் கேள்வியெழுப்பினார்.

இதன்போது, ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க, நடுத்தர வருமானம் பெறும் நாடு என்ற வகையில் இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்தாகஅறிவித்திருக்கும் நிலையில் பொதுவான கடன் மறுசீரமைப்பு கொள்கைகள் எமக்கு பொருத்தமற்றதாகும். சலுகை அடிப்படையிலான நிதி வசதிகளை வழங்குவதற்கான இயலுமை எம்மிடத்தில் குறைவாகவே காணப்படுகின்றது. அதேபோல் உள்ளக நிதி வசதிகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களும்பெருமளவில்முடங்கிப்போயுள்ளது. இதனால், நாம் கடன் தொடர்பான திட்டங்கள், கடன் மறுசீரமைப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தாக்கம் செலுத்தும் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதன் பின்னரே சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தோம்.

சரியானதொரு முறைமைக்குள் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க ஆரம்பித்த பின்னரே நிலைமையை சீராக்க எம்மால் முடிந்தது. அதற்கமைய முன்னெடுத்துச் செல்லவேண்டியதிட்டங்கள் எவை? அவசியமற்ற திட்டங்கள் எவை? என்பன தொடர்பில் ஆராய்ந்து கைவிடப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் 90 சதவீமான இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. அதே போல்மேலும்இரண்டுமுக்கியமான விடயங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது.

அதில் முதல்விடயம் எமக்கு உதவிக்கு வந்த இந்தியாவிடமிருந்து 4 பில்லியன் டொலர்கள் கிடைத்தது. அந்த நேரத்தில் எமக்கு வேறு எந்த உதவிகளும் கிடைப்பதாக தெரியவில்லை. அடுத்தாக உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் உதவிகளைப்பெற்றுகொள்ள முடிந்தது. அதற்கமைய எமது இலக்கு சுமூகமான நிலைமைக்கு மாறியது.

இருப்பினும் எமது நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றுவிட்டதாகஅறிவித்தன் பின்னர் அதிகாரிகளின் செயற்பாடுகளில் மந்த நிலை காணப்பட்டது. அந்ததாமதம் ஏற்பட்டிருக்காவிட்டால் மே மாதமளவில் எமக்கு நிதியத்தின் உதவிகள் கிடைத்திருந்தால் குழப்பகரமான நிலைமையை சுமூகமாக்கியிருக்கலாம்.

எவ்வாறாயினும்ஜூலை மாதத்தில் உருவான பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. செப்டெம்பர் மாதமளவில் நிதியத்தின் செயற்குழு மட்டத்திலான இணக்கப்பாட்டினை அடைந்து கொள்ள முடிந்தது. எவ்வாறாயினும் ஒப்பந்தத்தில் கைசாத்திட்டதிலிருந்து 6 மாதங்களின் பின்னரே நிதி வசதியை எம்மால் பெற்றுக் கொள்ள முடிந்தது.

அதன்படிநாம் முன்னெடுத்திருந்த பொருளாதார மறுசீரமைப்புச் செயற்பாடுகளால் மக்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருந்தனர். அது எவ்வித முன்னறிவிப்புக்களும் இன்றி உருவாகியநிலைமையாகும். தலைவர் ஆசார்யா அவர்கள் கூறியவிடயங்களுடன்நான் இணங்குகிறேன். அந்த விடயங்களைநாம்விரைந்து செய்திருக்க வேண்டியது அவசியமாகும்.

நான் முன்பு கூறியது போது செயற்குழு மட்டத்திலான இணக்கப்பாட்டினை செப்டெம்பர் மாத்திலேயே அடைந்துகொள்ள முடிந்தது. நவம்பர் மாதமளவில் எம்மிடத்தில் முன்னேற்றகரமான திட்டமொன்று காணப்பட்டது. அதனை பின்னரே அறிவித்தோம். அதனைத் தொடர்ந்து இலங்கைக்குள் போட்டித்தன்மை மிகுந்த முன்னேற்றகரமான நிலைமை ஒன்று உருவாகியது.

அதன்படிஉத்தியோபூர்வ மற்றும்தனிப்பட்டநிதிதேவைகள் வலுவடைந்தது. இங்கு முக்கியமான விடயமொன்றைக் குறிப்பிட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்தைகளின் நிறைவில் மேலும் நீடிக்கப்பட்ட நிதி வசதிக்கான அனுமதிகளை பெற்றுக்கொள்ள முடிந்தது. கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான அடுத்தக்க திட்டமொன்று எம்மிடத்தில் காணப்படவில்லை. அதனால் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான உரிய திட்டமிடலை தயாரிக்க வேண்டிய அவசியம் எமக்கு உள்ளது.

எவ்வாறாயினும்மேலும் சிலஅனுபவங்கள்பற்றிநான் கூறுகிறேன். தரவுகளுடனும், தரவுகளுக்கு அமையவும் செயற்பட்டமையே எமது வெற்றிக்கான காரணமாகும். நாம் எங்களது வேலைத்திட்டத்தை பின்பற்றினோமே தவிர சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தினைபின்பற்றவில்லை.

பின்னர்எமதுஉத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுக்கான களமொன்றை உருவாக்க முயற்சித்தோம். அவர்களின் மத்தியில் பெரிஸ்சமவாயத்தின் உறுப்பினர்களும், இந்தியா, ஹங்கேரி மற்றும் ஏனைய நாடுகள் பலவும் காணப்பட்டன. இங்கு சீனா மேற்பார்வைரீதியில்பங்குபற்றியது. நாங்கள் எம்மிடத்தில் காணப்பட்ட அனைத்து தகவல்களையும் ஏனைய தரப்புக்களுடன்முழுமையான வெளிப்படைத்தன்மையுடன் பரிமாற்றிக்கொண்டோம். இந்த விடயத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் தலையீட்டிற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

அதேநேரம் இந்தியா, ஜப்பான். சீனாவுடன் தனித்தனியான கலந்துரையாடலிலும்ஈடுபட்டோம். வணிக ஒருமைப்பாடுகள் மற்றும்எதிர்காலஅபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றியதாக அந்த கலந்துரையாடல்கள் அமைந்திருந்தன.

அமெரிக்கா மற்றும் சீனாவிற்கிடையில் வலுப்பெறும்விடயங்கள் பற்றியும் நாம்அவதானிக்கவேண்டும். இந்த பிரச்சினைகளை நாம் தவிர்க்க முற்படாத பட்சத்தில் ஆசியாவும், ஆபிரிக்காவும் மிகப்பெரிய நெருக்கடிக்கு முகம்கொடுக்க நேரிடும். இதுவே தற்போது நாம் நிவர்த்திக்க வேண்டிய மிக முக்கிய சவாலாக காணப்படுகின்றது.

மறுசீரமைப்புச் செயற்பாடுகள் அவசியம். அதற்கு நான் இணங்குகிறேன். அதனை மிக விரைவில் செய்யவேண்டும். அதனைச் செய்யத்தவறினால்குறைந்த வருமானம் பெறும் நாடுகள் மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் அரசியல் மற்றும் பொருளாதார நிலையற்ற தன்மைக்கு முகம்கொடுக்க நேரிடும். எவ்வாறான சவால்கள் இருப்பினும் வங்குரோத்து நிலையைஅடையும்முன்பாக மேற்படி நிலைமைகளை சீர்ப்படுத்தினால் மிகவும் சுமூகமான நிலையை அடைந்துகொள்ள முடியும் என்றார்.

## தீர்ப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்படவிருந்த நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நிஸங்க பந்துலகருணாரத்னமற்றும் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றஅமர்வு இதுதொடர்பான தீர்மானம் எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.k

## தமிழ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைக்கப்பட்டது.

'எமது கோரிக்கையின் பிரகாரம் குறித்த அரசியல் கைதி நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்' - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

## பல்கலைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்பு கிடைத்துள்ள விருப்பமுள்ள மாணவர்களுக்கு கல்வி நிறுவனங்களுக்கு சென்று வட்டியில்லா கடன் பெற்றுக்கொண்டு தங்களின் உயர் கல்வி நடவடிக்கையை தொடர நல்லாட்சி அரசாங்க காலத்தில் நடவடிக்கைஎடுத்திருந்தோம்.

ஆனால் 2021, 2022ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்கு வாய்ப்பு கிடைத்த 7ஆவது குழுவினருக்குஇந்தகடன்உதவியை பெற்றுக்கொள்ள இதுவரை வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படவில்லை. என்றாலும் இந்த வேலைத்திட்டம் செயற்படுவதாக ஜனாதிபதி ஊடக பிரிவு அறிவிப்பானெறையும் வெளியிட்டிருந்தது.

2017ஆம்ஆண்டுபட்டக் கல்வியை கற்பிக்கும் 6 நிறுவனங்களுக்கு 26 பட்டப் பாடநெறிகளை கற்பத ற்கு வட்டியில்லா கடன் பெற்றுக்கொடுத்தோம். ஒரு கடன் தொகையின் பெறுமதி 8லட்சம் ரூபாவாகும்.

அத்துடன் வட்டியில்லா கடன் வேலைத்திட்டத்துக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள போதும் அந்த நடவடிக்கை இடம்பெறுவதில்லை.

அதனால் இது தொடர்பில் கவனம் செலுத்தி, மாணவர்களின் எதிர்கால பயணத்துக்கு இந்த சந்தர்ப்பத்தை பெறுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் இந்த வேலைத்திட்டத்தை செயற்படுத்துபுதியமுறைமைஒன்றை அமைக்கவேண்டியதில்லை. நல்லாட்சிஅரசாங்ககாலத்தில் அது அமைக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று இந்த அரசாங்கத்தின் ஆரம்ப பகுதியில் இந்த திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது என்றார்.

## தமிழ்க் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடுக்கல் - வாங்கல் விவகாரமே இந்தக் கொலைக்குக் காரணம் என ஆரம்பகட்டவிசாரணையில்தெரியவந்துள்ளதையடுத்துக் கொலையாளிகளைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸார் களமிறங்கியுள்ளனர்.

## குறைபாடு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகிறது, ஆகவே செயற்திட்டத்தைஇடைநிறுத்த முடியாது. குறைப்பாடுகளுக்க தீர்வு காண முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்றையதினம், விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக கட்டமைப்பில் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்திட்டத்தை வெளிப்படை தன்மையின் முன்னெடுக்கவும், தகுதியானவர்களுக்கு மாத்திரம் நிவாரணம் வழங்கவும் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

சமுர்த்திபயனாளர்களில் 30 சதவீதத்துக்கும் அதிகமானோர் நிவாரண தொகையை பெற்றுக் கொள்வதற்கு தகுதியற்றவர்கள் என தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட பரசீலனைகள்ஊடாகவெளிப்படுத்தப் பட்டுள்ளது.தகுதியுள்ளவர்கள் புறக்கணிக் கப்பட்டு,தகுதியற்றவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

அரச நிவாரண வழங்கல் திட்டத்தை மறுசீரமைக்கும் வகையில் அஸ்வெசும நிவாரண திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த திட்டம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு விசேட ஒழுங்குவிதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. அஸ்வெசும நிவாரண திட்டத்தில் குடும்ப அடிப்படையிலான பயனாளர்களின் பெயர் பட்டியல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து பல்வேறுதரப்பினர்குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். தகுதியானவர்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தால் அவர்கள் பிரதேச சபை ஊடாக எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மேன்முறையீடு செய்யலாம்.

அத்துடன் தகுதியற்ற ஒருவரின் பெயர் நிவாரண திட்டபட்டியலில் உள்ளடக்கப் பட்டிருந்தால் பொது மக்கள் எவரும் உரிய பிரதேச சபையில் முறைப்பாடு செய்யவாம்.

குடும்ப பயனாளர்களுக்கான நிவாரண தொகை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப்படும். அத்துடன் நீரழிவு நோயாளர்கள், சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் விசேட தேவையுடையவர்கள் என்ற அடிப்படையில் தனிநபர் பயனாளர்களின் பெயர் பட்டியல் எதிர்வரும் இருவாரகாலப்பகுதிகளுக்குள் வெளியிடப்படும்.

அஸ்வெசும நிவாரண செயற்திட்டத்தின் இரண்டாம் கட்ட விண்ணப்பம் எதிர்வரும் ஆகஸ்ட் மாஜதம் கோரப்படும். இந்த ஆண்டு விண்ணப்பம் செய்யாதவர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் விண்ணப்பிக்க முடியும்.

ஆகவே அஸ்வெசும நிவாரணசெயற்திட்டம்சிறந்த முறையில் முன்னெடுக்கபடுகிறது. ஒருதரப்பினரது கோரிக்கைக்கு அமைய செயற்திட்டத்தைஇடைநிறுத்த முடியாது. குறைப்பாடுகள் காணப்படுமாயின் அதனை ஆராய்ந்து தீர்த்துக் கொள்ள முடியும் என்றார்.

## இலங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பு வேலைத்திட்டம் சவாலானதாக அமைந்திருந்தாலும்புரிந்துணர்வுடன் முன்னோக்கிச் செல்வதற்கு முயற்சிப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இருதரப்பு கடன் வழங்குநர்களுடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பிலும் ஜெனட் யெலனுக்கு தெளிவுபடுத்தினார்.

இலங்கையின் அபிவிருத்தி வேலைத்திட்டம் மற்றும் 'காலநிலை சுபீட்சத்திற்கான திட்டமிடல்' என்பன தொடர்பிலும் இத்திட்டங்களுக்கு தனியார் துறையின் உதவியைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை பலப்படுத்திக்கொள்வது தொடர்பிலும் இங்கு ஆராயபட்டதோடு, எதிர்வரும் தினமொன்றில் இலங்கைக்கான விஜயமொன்றினை மேற்கொள்ளுமாறும் செயலாளருக்கு அழைப்பு விடுத்தார்.

## நுகர்வோர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலவற்றுக்கு முகம் கொடுத்திருந்தது. அவ்வாறான சந்தர்ப்பத்திலயே நாட்டு மக்களின்தேவைகளைபூர்த்தி செய்வதற்கு அவசியமான அமைச்சு ஒன்றை எனக்கு வழங்கினார். நாட்டிற்குள் சில உணவு பொருட்கள் இரண்டு நாட்களுக்கு மட்டுமே மீதமிருந்தன. விவசாய துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக வரலாற்றில் ஒருபோதும் இல்லாத அளவிற்கு அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமைஏற்பட்டது. கடந்தஅரசாங்கத்தின் உரக் கொள்கை உணவுத் தட்டுப்பாட்டிற்கு முக்கிய காரணமாக மாறியிருந்தது.

எவ்வாறாயினும் விவசாயிகளுக்கு அவசியமான உரத்தை பெற்றுக் கொடுப்பதற்கு அவசியமான வேலைத்திட்டத்தை ஜனாதிபதி உரிய வகையில் நடைமுறைப்படுத்தினார். அந்த வகையில் ஜனாதிபதியின் சரியான நடவடிக்கையின் காரணமாக எதிர்வரும் நாட்களில் அரிசி இறக்குமதிக்கான அவசியம் இல்லாமல்போகும். அதனால் அரிசி இறக்குமதிக்காக செலவிடப்பட்ட 350 மில்லியன்அமெரிக்கடொலர்கள்நாட்டிற்கு மீதமாகும். அவ்வாறு மீதமாகும் பணத்தைக் கொண்டு ஏனைய பொருட்களை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு கிட்டும்.

தற்போது பொருட்கள் இறக்குமதி செயற்பாடுகள் சிறந்த முறையில் இடம் பெறுகின்றன. நிறுவனங்களுக்கு அவசியமான கடன் பத்திரங்களைவிநியோகிக்கும் செயற்பாடுகளும் வலுவாக முன்னெடுக்கப்படுகின்றது. வர்த்தகச் சந்தையில் நிலைமை சுமூகமாக மாறியிருந்தாலும் பொருட்களின் விலைகள் ஏன் குறையவில்லை என்பதே மக்களின் கேள்வியாக உள்ளது. ஒக்டோபர் மாதமளவில் பொருளாதார வளர்ச்சியை தனிப் பெறுமானத்திற்கு கொண்டு வருவதற்கான இயலுமை கிட்டும் என நம்பிக்கை உள்ளது.

2022 ஆம் ஆண்டில் காணப்பட்டதை விடவும் இன்றளவில் பொருட்களின் விலைகள் குறைந்துள்ளன. உதாரணமாககூறுவதாயின் 314 ரூபாயாக காணப்பட்ட ஒரு கிலோ வெங்காயத்தின் விலை 120 ரூபாவாக குறைவடைந்துள்ளது. அதபோல் உருளைக் கிழங்கு , வெளளை சீனி, பருப்பு, கடலை, வெள்ளை அரிசி உள்ளிட்ட பல்வேறு பொருட்களின்விலைகுறைவடைந்துள்ளது. நேரடி இறக்குமதிக்கு அனுமதி வழங்கியமையினாலயே அவற்றின் விலைகள் குறைவடைந்துள்ளன. உள்நாட்டு வியாபாரிகள் பலரும் விலைக் குறைப்பின் நலன்களை மக்களுக்குக்கு பெற்றுக்கொடுக்கவில்லை.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட சலுகையின் காரணமாக விலைகளை குறைப்பதற்கான இயலுமை அவர்களுக்கு உள்ளது. எதிர்வரும் நாட்களில் பொருட்களின் விலையை குறைக்காதவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள நுகர்வோர் அதிகார சபைக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் டைல், குளியலறை சாதனங்கள் போன்றவைகளுக்கான குறைந்தபட்ச சில்லறை விலையை நிர்ணயம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்தோடு விற்பனை செய்யப்படும் அனைத்து பொருட்களுக்குமான குறைந்தபட்ச சில்லறை விலையினை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படும். டைல்இறக்குமதியைமட்டுப்படுத்துவதால் அதன் விலை அதிகரிக்கிறது. டொலருக்கு இணையாக ரூபாயின் பெறுமதி அதிகரிப்பதாலும் போட்டித்தன்மையைவழங்க முடியும்.

அந்த போட்டிக்கு தயாராகுமாறு நான் அறிவித்துள்ளேன். அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அவசியமான சூழல் தற்போது உருவாகியுள்ளது. எதிர்வரும் நாட்களில் சீமெந்துக்கான விலை நிர்ணயத்தின் போது அதனை மேற்கொண்ட முறைமை தொடர்பில் எனக்கு அறிவிக்குமாறு உரிய நிறுவனங்களுக்கு நான் அறிவுறுத்தியுள்ளேன். சீமெந்து உற்பத்திக்கான செலவு, இலாபம், வியாபாரிகளுக்குக்கான இலாபத்தை கருத்திற்கொண்டு அதிக பட்ச சில்லறை விலையினைநிர்ணயிக்கஎதிர்பார்த்திருக்கிறோம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் சோதனை நடவடிக்கைகளுக்கு மாறாக மக்களை தெளிபடுத்தும் வேலைத்திட்டங்களில் ஈடுபட வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. விலைகள் சரியான முறையில் காட்சிப்படுத்தப்படும் பட்சத்தில் விலையை சரியாக அறிந்துக் கொள்ள முடியும். அந்தச் செயற்பாடு நூறு சதவீதம் சரியாக இடம்பெறுகின்றதாஎன்பதைதேடிஅறிய நுகர்வோர் அதிகார சபைக்கு அறிவுறுத்தல் வழங்கப் பட்டுள்ளது.

வாழ்க்கை செலவு அதிகமாவதை குறைக்கும் நோக்கில் உற்பத்திச் செலவீனங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள் அவசியம். உற்பத்தியாளர்களுக்கு புதிய தொழில்நுட்பத்தை பெற்றுக் கொடுக்க வேண்டியது அவசியமாகும். தற்போது நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பிலான அறிக்கையொன்றை தயாரிக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. அதனூடாக உள்நாட்டு உற்பத்தியாளர்கள் ஊடாக குறைந்த விலையில் நுகர்வோருக்கு பொருட்களை பெற்றுக்கொடுக்கும் இயலுமைகாணப்படுகின்றது. பருப்பு முழுமையாக இறக்குமதி செய்யப்படுகின்றது. உள்நாட்டில் தயாரிக்க வேண்டிய பொருட்களையும் தற்போது வெளிநாட்டிலிருந்துஇறக்குமதி செய்துகொண்டிருக்கிறோம். இவற்றைபுரிந்துக்கொண்டுச் செயற்பட வேண்டும்.

இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோரை கையாளுவது மிகவும் கடினமானதாகும். 20 வருடங்களுக்கு பின்னர் நுகர்வோர் சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்ள அனுமதிகிடைத்துள்ளது. அந்த சட்டமூலம் தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதனூடாக நுகர்வோருக்கு உயரிய பாதுகாப்பினை வழங்க முடியும்.

தொடர்ச்சி 10 ம் பக்கம்

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு, கிழக்கில் பௌத்த மேலாதிக்கம் இனமுரண்பாட்டை தோற்றுவிக்கும் செயல்!

## வினோ நோகராதலிங்கம் காட்டம்



வடக்குமற்றும்கிழக்குமாகாணங்களில் இன முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் பௌத்த மேலாதிக்கம் தீவிரமடைந்துள்ளது. தென்னிலங்கையில் ஆதிக்கம் கொள்வதற்காக ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனவாதத்தை பேசி திரிகிறார்.

இவர்களை அடக்க அரசாங்கம் நடவடிக்கைஎடுக்கவில்லை.முல்லைத்தீவு குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ள நிலையில் அதற்கு அப்பாற்பட்ட வகையில் பௌத்த மேலாதிக்கம் செயற்படுவதால் நீதி கட்டமைப்பின் மீது சந்தேகம் எழுந்துள்ளது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்இடம்பெற்ற,ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் நடைபெறுகின்றது. மனித உரிமைகள் பேரவையின் பிரதி ஆணையாளரின் உரையில் இலங்கை தொடர்ந்தும் பொறுப்பு கூறலை உறுதிப்படுத்தாமல் தண்டனையில் இருந்து விடுபடும் போக்கு முடிவுக்கு கொண்டுவரப்படாமல், அலட்சியமாக செயற்படுகிறது என்று சுட்டிக்காட்டி கண்டித்துத்துள்ளமையைத் தமிழ் மக்கள் சார்பில் வரவேற்கிறோம்.

சர்வதேச விசாரணை பொறிமுறை விடயத்தில் தொடர்ந்தும் இலங்கை ஏமாற்றுமாக இருந்தால் அந்த பொறிக்குள் இந்த அரசாங்கம் அகப்படுவதை தடுக்க முடியாது என்பதையும் பிரதி ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். ஐ.நா மனித உரிமைகள் ஆணையகம் கடந்த காலங்களில் எடுத்த முடிவுகளை நிறைவேற்றாது இலங்கை இருக்குமாக இருந்தால் அதற்கான தண்டனை நிச்சயமாக கிடைக்கும். அதற்கு நாங்கள் பக்க பலமாக இருப்போம் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் ஜெனிவாவுக்கான இலங்கையின் வதிவிட பிரதிநிதி அதற்கு பதிலளிக்கையில், இங்கே அனைத்தும் சுமுகமாக நடைபெறுகின்றன என்றும் இராணுவத்தினரிடம்இருக்கும்காணிகளில் 98 வீதம் விடுவிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்துள்ளார். ஆனால் வன்னியில் 98 வீதமான காணிகள் இன்னும் இராணுவத்திடமே இருக்கின்றன.

சிறியளவிலான காணிகளே விடுவிக்கப்பட்டுள்ளன. இதேவேளை மக்கள் இன்னும் மீளவும் குடியேறாது தவித்துக்கொண்டுள்ளனர். அரச படைகள் தேசிய பாதுகாப்பு என்ற ஒற்றை வசனத்தில் அங்கே இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஜனாதிபதி உரையாற்றும் போது பொய்களையேகூறுகின்றார். அதேபோன்று ஜெனிவாவில் உள்ள இலங்கைக்கான வதிவிட பிரதிநிதியும் பொய்களையே கூறுகின்றார். எவ்வாறாயினும் மனித உரிமைகள் ஆணையகத்தையோ, சர்வதேசசமூகத்தையோஎந்தவகையிலும் ஏமாற்றமுடியாதுஎன்பதைக்கூறுகின்றேன்.

ஜனாதிபதி அடிக்கடி உரையாற்றுகின்றார். ஆனால் அவர் கூறுவனவற்றை நடைமுறைப்படுத்துவதில்லை. அரசியல் தீர்வுவிடயத்தில்கடந்தசித்திரைக்குமுன்னர் தீர்வு எட்டப்படும் என்று கூறினார். ஆனால் இன்னும்அதுநடைபெறவில்லை. நல்லாட்சி காலத்தில் இருந்து பிரதமராக இருக்கும் போதிருந்து கூறுகின்றார். ஒவ்வொரு தைப்பொங்கல்,தீபாவளி, புத்தாண்டில் தீர்வு என்று பொய் சொல்லி ஏமாற்றுகின்றார்.


தமிழ்மக்களுக்கென நிலையான தீர்வை பெற்றுக்கொள்ள முடியாதுள்ள நிலைமையில் இனவாதம் பேசி பௌத்த பிக்குகளுக்கு அப்பால் இந்த நாடாளுமன்றத்தில் உள்ள உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ போன்றோர் தொடர்ச்சியாக இனவாத சிந்தனையுடன் பௌத்த மேலாதிக்கத்தை இந்த நாட்டில் மேலோங்கச் செய்யத் திட்டமிட்ட வகையில் அவர்கள் பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

அரசாங்கத்தால் அந்த இனவாத குரல்களுக்கு எதிராக செயற்படவோ, அதனைஅடக்கவோமுடியாதநிலைமையே இருக்கின்றது. தொடர்ச்சியாக இவர்கள் போன்றோர் இனவாதத்தை மக்கள் மத்தியில் கக்கிக்கொண்டிருக்கின்றனர். நீதிமன்ற உத்தரவுகளையும் மீறி குருந்தூர் மலையில் அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதுதொடர்பில் முறையிட்டும் எங்களுக்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்படுகின்றது.

தொடர்ச்சியாக இந்த நிலைமை நீடிக்கப்படுமாக இருந்தால், வன்னி மாவட்டத்தில் திட்டமிட்டு சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்தப்படுமாக இருந்தால், இது சிங்களவர்களுக்கு உரியது பௌத்த பூமி தொல்பொருள் திணைக்களம் பௌத்தத்துக்கு மட்டுமேயானது என்பதை நிறுவுவதற்காக திட்டமிடும் போது அங்கே மிகப்பெரிய இன முரண்பாட்டை வளர்ப்பதற்கு வழியேற்படுத்தப்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றேன்.நாங்கள்நீதிமன்றத்தை நம்புகின்றோம், அதனை நாடியுள்ளோம். ஆனால் நீதிமன்ற உத்தரவுகளுக்கு மாறாக பௌத்த மேலாதிக்கம் உயர்ந்து நிற்பதால் நீதிமன்றங்கள் தேவையா? அதனூடாக நீதி கிடைக்குமா? என்ற நிலைமை உள்ளது. - என்றார். (05)

# ஜனாதிபதி ஹிட்லரை போலச் செயற்படுகின்றார் தொல்பொருள்கள் மீது கைவைப்பதை தவிர்க்குக

## சரத் பொன்சேகா அறிவுறுத்து



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஹிட்லரை போல் செயற்பட முயற்சிப்பதுகவலைக்குரியது. அரசியல் நோக்கத்துக்காக தொல்பொருள் மரபுரிமைகள் மீது கை வைப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இல்லாவிடின் பாரிய விளைவு ஏற்படும். நாட்டை சீரழித்தவர்களுடன் ஒன்றிணைந்து செயற்பட முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை சீரழித்தவர்கள் தற்போது ஒன்றும் அறியாதவர்கள் போல் கருத்துரைப்பது வேடிக்கையாகவுள்ளது.

ஆட்சியில் இருந்த ஜனாதிபதிகள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் ஆற்றிய உரை முழுமையாக செயற்படுத்தப்பட்டிருந்தால் நாட்டு மக்கள் சொர்க்கத்தில் வாழ்ந்திருப்பார்கள்.

நாட்டுமக்கள்ஒருவேளைஉணவை பெற்றுக்கொள்ளப் போராடுகின்ற நிலையில் பொருளாதார பாதிப்பில் இருந்து மீண்டு விட்டோம் என கனவு உலகில் இருந்துக் கொண்டு ஜனாதிபதி கருத்துரைக்கிறார்.

அமெரிக்காவில்டொலரின்பெறுமதி குறைவடைந்த போது தேசிய மட்டத்தில் ரூபாவின் பெறுமதி உயர்வடைந்தது. இதனை பொருளாதார மீட்சி என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். கடன் பெறுவதைத் தவிர எவ்வித பொருளாதாரக் கொள்கைத் திட்டங்களும்ஜனாதிபதியிடம்கிடையாது.

பாரம்பரியஅரசியல்முறைமையில் இருந்து விலகி தேசிய வளங்களைத் தனியார்மயப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். விடுதலைப் புலிகள் அமைப்புடன் நித கொடுக்கல் வாங்கல் செய்த நபருக்கு டெலிகொம் நிறுவனத்தை வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். அதற்கான பேச்சை பிரித்தானியாவில் ஆரம்பித்துள்ளார்.

கடன் பெற்று பொருளாதாரத்தை முன்னேற்றவும், கடுமையான சட்டங்களை இயற்றி சமூகக் கட்டமைப்பைக் கட்டுப்படுத்தவும் ஜனாதிபதி முயற்சிக்கிறார். அரசியல்வாதிகளின்முறைகேடுகளைவெளிக் கொண்டு வரும் ஊடகங்களை முடக்குவதற்காக ஒளி,ஒலி பரப்பு ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் முறையற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஹிட்லரைப் போல் செயற்பட முயற்சிக்கின்றமை கவலைக்குரியது. தனது குறுகிய அரசியல் நோக்கத்துக்காக ஜனாதிபதி தொல்பொருள் மரபுரிமைகளில் கை வைக்கிறார்.

இதுதவறானதொருசெயற்பாடாகும். இதனைத்தவிர்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிடின் பாரிய விளைவுகள் ஏற்படும்.

நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்களுடன் ஒன்றிணைந்து ஒருபோதும் செயற்பட முடியாது. ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க ஒற்றைசங்கிலி பாலத்தில் நாட்டை கொண்டு செல்லவில்லை. ராஜபக்ஷர்களை தூக்கிக் கொண்டு செல்கிறார். இவ்வாறானவர்களுடன் எவ்வாறு இணக்கமாக செயற்பட முடியும். - என்றார். (05)

# கோட்டாவின் ஆட்சியில் நாடு 9 ஆண்டுகள் பின்தங்கியது

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு



கோட்டாபய ராஜபக்ஷவின் இரண்டரை வருடகால ஆட்சியில் நாடு ஒன்பது ஆண்டுகள் பின்னோக்கி சென்றுள்ளது. பொருளாதாரப் பாதிப்பை ஏற்படுத்தி நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளியவர்கள் இன்று பொறுப்பில் இருந்து விலகும் வகையில் கருத்துரைக்கிறார்கள் என ஐக்கிய மக் கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய தேசிய கடன் மறுசீரமைக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுவது அடிப்படை யற்றதாகும். ஒட்டுமொத்த கடன்களையும் மறுசீரமைக்குமாறு சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டது.

தேசியகடன்களை மறுசீரமைப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மார்ச் மாதம் 06 ஆம் திகி சர்வதேச நாணய நிதியத்துக்கு நிதியமைச்சர் என்ற ரீதியில் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

2048 ஆம் ஆண்டு நாட்டை அபிவிருத்தி செய்வதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். பொருளாதார விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

2022 ஆம் ஆண்டு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி மற்றும் தனிநபர் ஒருவரின் வருமானம் 3 ஆயிரத்து 400 டொலராக குறைவடைந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இரண்டரை வருட ஆட்சி காலத்தில் நாடு 09 ஆண்டுகள் பின்னோக்கி சென்றுள்ளது.

2048 ஆம் ஆண்டு நாடு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் ஒவ்வொரு ஆண்டும் பொருளாதார வளர்ச்சி வீதம் 6.5 சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும்.

ஆகவே பொருளாதார முன்னேற்றத்தை அரசியல் காரணிகளை அடிப்படையாக கொண்டு குறிப்பிட முடியாது. - என்றார். (05)

# நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை ஆஸிக்கு வழங்க தீர்மானம் இல்லையாம்

## மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன கூறுகிறார்

இலங்கை மின்சார சபை இன்றளவில் அரசவங்கிகளுக்கு 516 பில்லியன் ரூபா கடனாளியாக உள்ளது. ஆகவே மின்சார சபையை மறுசீரமைப்பதைத் தவிர மாற்று வழியேதும் கிடையாது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை ஆஸ்திரேலிய நிறுவனத்தக்கு வழங்க தீர்மானித்துள்ளதாக தொழிற்சங்கங்கள் குறிப்பிடும் விடயம் அடிப்படையற்றது.

நீர் மின் உற்பத்தி நிலையங்களை ஒரு நிறுவன கட்டமைப்பின் கீழ் கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர் வில் வாய்மூல விடைக்கான வினாக்கள்வேளையின்போதுஐக்கியமக்கள்சக்தியின்நாடாளுமன்றஉறுப்பினர் காவிந்த ஜயவர்தன முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பாரிய நட்டத்தில் இயங்கும் மின்சார சபையை மறுசீரமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் மறுசீரமைப்புக்கான பணிகள் முன்னெடுக்கப்படும். மின்சாரசபையின் கட்டமைப்புக்களை வேறுப்படுத்தவும் சேவையாளர்களை புதிய நிறுவன கட்டமைப்புக்குள் உள்வாங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபை இன்றளவில் 516 பில்லியன் ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளது.

மின்னுற்பத்திக்கான செலவை முகாமைத்துவம் செய்யும் வகையில் மின்கட்டணம் காலத்துக்குக் காலம் மறுசீரமைக்காத காரணத்தால் மின்சார சபை நிதியியல் ரீதியில் பாரிய நெருக்கடிகளை இதுவரை காலமும் எதிர்கொண்டது.

தற்போது அமுலில் உள்ள புதிய மின்கட்டண திருத்தத்தால் தற்போது மின்னுற்பத்திக்கான செலவுகளை முகாமைத்துவம் செய்ய முடிந்துள்ளது.

மின்சார சபையை மறுசீரமைக்கும் யோசனைக்கு ஒட்டுமொத்த தொழிற்சங்கங்களும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அரசியல் நோக்கத்துடன் செயற்படும் ஒருசில தொழிற்சங்கத்தினர் மாத்திரமே எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணிக்கு சார்பாக செயற்படும் தொழிற்சங்க தலைவர் ரஞ்சன் ஜயலால் மின்சார சபை சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர். இவர் தனது அரசியல் கட்சியின் தேவைக்காக மின்சார சபையின் சகல சேவையாளர்களையும் தவறாக வழிநடத்துகிறார்.

நுரைச்சோலை அனல் மின்நிலையத்தை ஆஸ்திரேலிய நாட்டு நிறுவனத்துக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் அடிப்படையற்றவை.

அனல் மின்நிலையத்தை அன்மித்த பகுதியில் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்டு இரண்டாம் கட்ட தொழிற்துறைகளை முன்னெடுக்க வெளிநாட்டு நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக இதுவரை எவ்வித இறுதி தீர்மானமும் எடுக்கப்படவில்லை. - என்றார். (05)

# எந்த மதங்களையும் அவமதித்து செயற்பட எவருக்கும் இடமில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் திட்டவட்டம்



எந்தவொரு மதத்தையும் அவமதிக்கும் வகையில் நடந்துகொள்வதற்கு எவருக்கும் முடியாது.

அதேநேரம் மத விடயங்களில் மதத் தலைவர்கள் நல்ல வசனங்களைபேசியும், நல்லிணக்கம், ஒழுக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தும் வகையிலும் நடந்து கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற, அண்மையில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கை யில் -

நாங்கள் அனைவரும் அனைத்து மதங்களையும் மதிக்க வேண்டும். எந்தவொரு மதத்தையும் தூண்டிவிடும் வகையில் செயற்படுவதற்கு எவருக்கும் முடியாது.

அவ்வாறான கலாசாரத்தை இந்தநாட்டுக்கு கொண்டுவந்தவர்கள் யார் என்பதை நாம் அறிவோம்.

அன்று கருத்தடை கொத்து, கருத்தடை சிகிச்சை, மருத்துவர் ஷாபி போன்றெல்லாம் கூறினர்.

ஆனால் இன்று வைத்தியர் ஷாபிக்கு அவரின் தொழில் மீள வழங்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் எந்தவொரு மதத்தை அடிப்படையாகக் கொண்டும் நக்கல் நையாண்டிகளை செய்து ஜோக்கர்களாக முடியாது என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கிறேன்.

அதேபோன்று மதத் தலைவர்களும் நல்ல வசனங்களைப் பேசி, நல்லிணக்கம், ஒழுக்கம், ஆகியவற்றைஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுகின்றேன். - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அணுகுமுறை மாறாத வரை தீர்வு கிட்டாது

**யாழ்ப்பாணத்தில் கட்டுமீறிய இளைஞர்களால் இளம் பெண்கள் எதிர்கொள்ளக்கூடிய, குறிப்பாக பாடசாலை மாணவிகள் எதிர்கொள்ளக்கூடிய சிக்கல்கள், பிரச்சினைகள், முறைதவறிய நடத்தைகளில் இருந்து தம்மைப் பாதுகாப்பதற்காக பாடசாலைஆசிரியர்களால்புலனக்குழுக்கள்(வட்ஸ் அப் குழு) உருவாக்கப்பட்டு நிர்வகிக்கப்படவேண்டும் என்றுகாவல்துறையினர்ஆதரவுதெரிவித்துள்ளார். அந்த அறிவுறுத்தலில் மாணவிகள் பாடசாலைக்கு வரவில்லைஎன்பதுஉள்ளிட்டமாணவிகள்தொடர்பான செய்திகளைப் பெற்றோர் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் தகவல்கள் பகிரப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.**

**மாணவிகளுக்குத்தொல்லைகொடுப்பவர்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக பாதிக்கப்பட்ட மாணவிகளையே கண்காணிப்புக்கு உள்ளாக்கும் இந்தப் பொறிமுறை பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியுமா? எப்போதும் ஆபத்துக்களில் இருந்து குறிப்பாக பாலியல் துன்புறுத்தல்களில் இருந்து பெண்களைப்பாதுகாப்பதே அவசியம் என்கிற ஆணாதிக்க சிந்தனையின் நீட்சியாகவே இதனையும் பார்க்கவேண்டியிருக்கின்றது. மாணவிகள் பாடசாலைக்கு வராததைக் கண்காணிப்பதற்கான பொறிமுறை பற்றி அறிவித்திருக்கும் காவல்துறை, மாணவர்களை (ஆண்கள்) கண்காணிப்பதற்கும், அவர்கள் பாடசாலைக்கு வரவில்லை என்றால் தெரிந்துகொள்வதற்கும் எந்தப் பொறிமுறையையும் உருவாக்கவில்லை.**


**மாணவர்கள் பாடசாலைக்கு வரவில்லை என்றால், வீட்டுக்குத் தெரியாமல் பாடசாலையை தவிர்க்கிறார்கள் என்றால் அவர்களும் பாதை மாறிச் செல்ல, எதிர்காலத்தைக்கெடுத்துக்கொள்ளவாய்ப்பு ஏற்படும். ஆனால், அவர்களைக் கண்காணிப்பதற்கான பொறிமுறை பற்றி அக்கறைகொள்வதற்குப் பதில் மாணவிகளின் பாதுகாப்புத் தொடர்பில் இத்தகைய முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.**

**சேலை முள்ளில் விழுந்தால் என்ன முள்ளு சேலையில் விழுந்தால் என்ன சேதம் என்னவோ சேலைக்குத்தான் என்கிற மிகப் பழைய சிந்தனையின் வெளிப்பாடே இது. இந்த 21ஆம் நூற்றாண்டிலும் இவர்களால் எப்படி இப்படிச் சிந்திக்க முடிகின்றது என்பது ஆச்சரியமாகவே இருக்கின்றது. பிரச்சினையை – பாதிப்பை – ஏற்படுத்துபவர்களைவிட்டுவிட்டு பாதிக்கப்பட்டவர்களையே குற்றஞ்சாட்டும் – பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கி இருக்க வழிகாட்டும் – இந்த அணுகுமுறையில் மாற்றம் ஏற்படாத வரையில் இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டப்போவதில்லை.**

**இங்கே பெண்பிள்ளைகள் எப்படி நடக்கவேண்டும் என்பதைக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னர் அவர்களுடன் ஆண்கள் எப்படிப் பழகவேண்டும் என்பதைக் கற்றுக்கொடுப்பதுதான் மிக முக்கியமானது. ஆண்கள், ஆண் மாணவர்கள் பெண்களை, மாணவிகளை சக மனிதர்களாகப் பார்த்துப் பழகுவதற்கு வழிப்படுத்தப்படாதவரையில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அத்துமீறல்களும் மோசமான நடத்தைகளும்தொடர்ந்துகொண்டேதான் இருக்கும்.**

**அணுகுமுறை மாற்றத்தைக் கொண்டுவந்து, புதிய சிந்தனைப்போக்கைவளர்த்துக்கொள்ளாதவரையில், யாருக்குஅவசியமோஅவர்களுக்குஅதனைக்கற்றுக் கொடுக்க முன்வராதவரையில் மாணவிகளைக் கண்காணித்தும் எந்தப் பயனும் இருக்கப்போவதில்லை. கலாசாரமும் பண்பாடும் ஒழுக்கமும் இருபாலினத்தவர்களுக்கும் சமமானவையே என்கிற புரிந்துணர்வு ஏற்படுத்தப்படுவதுதான் இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைய முடியும்.**

# ஆறறிவுப் பிராணிகளே ஐந்தறிவின் குரல் கேளீரோ?



(ந.சதாசிவ ஐயர்)

தனக்கென அமைந்த இயற்கையோடு இணைந்து வாழ்வதே ஒவ்வொரு ஜீவனினதும் வாழ்க்கையாகும். காட்டில் மிருகங்கள் வாழ்கின்றன ஒன்றுக்கொன்று இரையாகி வாழ்ந்தாலும் அவை புறக்காரணிகளால்அழிக்கப்பட்டாலன்றி இனம்பெருக்கி பரம்பரை பேணி வாழ்கின்றன. நவீனம் வளர்ந்து காடுகள் அற்றுப்போகும் நிலையில் சரணாலயங்கள் வரையறுக்கப்பட்டு அவற்றின் இயற்கையான வாழ்வுக்கு வழிசமைத்துக்கொடுக்கப்படுகிறது. காடானது தாவரபட்சணிகளுக்கும் மாமிசபட்சணிகளுக்கும் சேர்ந்தே வாழ்விடமாக அமைகிறது. தாவர பட்சணிகள் புல்லையும் இலை குழைகளையும் காய்கனிகளையும் உண்டும் மாமிச பட்சனிகள் பசித்த போதுமட்டும் வேட்டையாடி உண்டும் நீர்நிலைகளில் நீரருந்தி மரங்களிலும் பொந்துகளிலும் இயற்கையோடு இணைந்து வாழந்திருந்தோம்நாங்கள்.

காலமாற்றத்தால் அறிவின் வளர்ச்சியால் காட்டில் எம்மோடு ஒன்றாக வாழ்ந்த மனிதன் வீட்டில் வாழத் தொடங்கினான் அவனின் தேவைகருதி எங்களில் சிலரும் வீட்டுவிலங்குகள் ஆனோம். மனிதனுக்கு பால்கொடுக்க பசுக்களும் ஏருக்கு எருதுகளும் இப்படியாக இன்னும் சில பிராணிகளும் காவலுக்கும் வேட்டைக்கும் நாய்களாகிய நாங்களும்துணையானோம். அதனால் காவல் தெய்வமான வயிரவப் பெருமானுக்கும் வாகனமாக மதிக்கப்பட்டோம்.

வாழும் காலத்தில் ஒரே சூலில் பத்துப்பிள்ளை பெறும் பாக்கியத்தையும் இறைவன் ஏன் எமக்குத் தந்தானோ தெரியவில்லை.

அதுவே எமது வாழ்க் கையின் துயரமாய் அமைந்தது ஆதவும் பெட்டைக் குட்டிகளானால் வீதிகளில் விடப்படும் வாழ்க்கையே அமைந்தது எம்மினத்திற்கு. அரிதாய் இருந்த நாம் பெருகிவிட்டதால் துயர வாழ்க்கை எம்மை துரத்தியே வருகிறது.பாராட்டி சீராட்டி வளர்த்தவர்கூட முதுமையில் வீட்டைவிட்டு துரத்தி பாதையில் விட்டு விடுகின்றனர். காட்டிலேயே இருந்திருந்தால் காட்டு வாழ்க்கை வாழ்ந்து இயற்கை சமனிலையில் இனிதாய் வாழ்ந்து மடிந்திருப்போம்.

இன்று வீட்டு வாழ்க்கை பழக்கமாகி வீதியெங்கும் திரிகின்றோம். உண்ண உணவில்லை நக்கி குடிக்க நீரில்லை உறங்க நிழலில்லை. நாம் பழகிவிட்ட விசித்திரமான பழக்கங்கள் எமக்கே எமனாகின்றன. எம்மினத்தில் ஒற்றுமையில்லை எவருமே நண்பரில்லை.

கண்டாலே பிடிப்பதில்லை உறுமத் தொடங்கிவிடுகிறோம். கண்டதும் தின்பதும் வேலிபுகுந்து களவெடுத்து உண்பதும். பகிர்ந்துண்ணாது பறித்துண்பதும்.

நடுரோட்டில்மலம்கழிப்பதும்கண்ட இடத்தில்கால்தூக்கிசிறுநீர்அடித்துவீட்டு முற்றங்களையும் கேற்றுக்களையும் பாழாக்குவதும் பாதையே வீடாகி புணர்ந்துபடுத்தெழுந்து குறுக்காலோடி வாகனங்கள் குடைசாய்த்து கால் கை முறியப்பண்ணி கொலைக்காளாகி நாமும் முடமாகி இறந்துபட்டு நம் செயலால் மற்றவரும் முடமாகி இறந்து கெடப்பண்ணி எத்தனை எத்தனை துன்பமடா எமக்கும்.

பாதையில் படுத்திருந்து பக்குவுமாய்ப் போவரை பாய்ந்து கடித்து விசரென்றுபேரெடுத்துவயிற்றைச்சுற்றி ஊசியும் குத்தவைத்து. சில நேரம் நீர்வெறுப்பு நோயென்று நாமும் மாய்ந்து அவனையும் சாகடித்து. எத்தனை துன்பம் எத்தனை துன்பம் சொறிநாய்ப்பட்டமும்விசர்நாய்ப்பட்டமும் சிலருக்கு வாய்க்கிறது.

இத்தனைக்கும் நடுவில் இடைக்கிடையே நாடகமொன்றும் நடக்குது பிராணிகளின் உரிமைக்காக போராடுவோராம் குரல் கொடுப்போராம் உணவழிப்போராம்எப்போதோஒருநாள் படையாக வந்து பார்சல் சாப்பாடு தந்து செல்பியும் எடுப்பர் முகநூலில்தான் பதிப்பர் புலம் பெயர்ந்தோரிடம் காட்டி பணம் சேர்ப்பர். யாரைச் சொல்லி என்னபலன்.

யானைகளின் தேவை ஓங்கிய காலம்போய்இன்றுஆலயத்தேவைக்கும் சுற்றுலாக்காரருக்கும் சில சேவை செய்ய மற்றவை சரணாலயங்களில் இயற்கையாய்வாழ விடப்படுகின்றன. (இன்று பசியின் கோரத்தால் வீடுகளில் சேனைகளில் அவை செய்யும் அட்டகாசம் தவறுதான்). பசுக்களும் எருதுகளும் பயன் குன்றியபின் எருவுக்காய் பட்டியிலும் இறைச்சியாய் கடையிலும். இந்து சமய நல்லுள்ளங்களால்கோகுலத்திலும்வாழ்ந்து மறைகின்ற பாக்கியம் பெறுகின்றன.

நாய்களாகிய எங்களில் சிலர் நல்ல காவல் செய்கிறோம் பொலிஸ்வேலை செய்கிறோம் கொலை களவு கொள்ளை போதைப்பொருள் தடுப்பில் எம்பங்கு பெரும்பங்கு. வீட்டுக்கொரு ஆண்நாய் மட்டுமன்றி செல்லமாகி பப்பியென்றும் பொப்பியென்றும் விஞ்ஞானத்தால் உரு பல எடுத்து கட்டிலிலும் மெத்தையிலும் மாடியிலும் கோடியிலும் மதிப்புடனே வாழ்கிறோம். மற்றவர்களோ உண்ண உணவின்றி உறங்க இடமின்றி றோட்டினிலே திரிகிறோம். ஆங்கேயேகூடிஅருகினிலே குட்டிபோட்டுகல்லெறிபட்டுகாரிலடிபட்டு நாமும்செத்து அவர்களையும் சாகடித்து சொல்லிடங்காதுசேரும்துயரெல்லாம். செல்லமாய் மாடியிலும் மடியிலும் வளர்வோரில் பலரும்கூட வயோதிபத்தில் சேருமிடம் எம்மருகே.

கழுத்தில் கம்பிபோட்டு கடலில் ஆழ்த்தி எம்மை கொன்றதொரு காலம். ஜீவகாருண்யம் என்று குளிரறைக்குள் கூட்டம் போட்டு தடுத்திருக்காவிட்டால் தாராளமாய் போயிருப்போம். (அந்தமனிதஇனமேஇன்று கருணைக்கொலைக்கும்சட்டத்துணை தேடுகிறது). சீனாவில் பிறந்திருந்தால் சீமானாய் வளர்ந்து சிறப்புணவாய் அமரராவோம் வயோதிபர்க்கு இல்லம் அநாதைகட்கு இல்லம் யானைக்குசரணாலயம் மாட்டுக்கு கோகுலம் மேச்சல்தறை அமைத்தவர்களே. நாமும் வாழவழி வகுப்பீர். எமக்கெதுவும் வேண்டாம் பாதுகாப்பு வேலியுடன் ஒரு திறந்தவெளி ஒரு நேர உணவு நக்க நீர் படுத்துறங்க நிழல்போதும்.

அடித் துக்கொள்வோம் ஆடிப்பாடுவோம் கூடுவோம்சொறிவோம் மழையில்நனைவோம் வெயிலில் காய்வோம் மணலில் புரள்வோம். கண்ட இடத்தில் மலங்கழிப்போம் சலம் விடுவோம்.

நீங்கள் குடும்ப கட்டுப்பாடு செய்வதுபோல் பெட்டை நாய்களுக்கும் ஊசி போட்டுவிடுங்கள்.எங்கள் மனம்போல இனம் பெருகாது கூடி மகிழ அது உதவும்.

றோட்டில் கிடக்கும்போது திரும்பிக்கூட பார்க்காத நீங்கள் ஜீவகாருண்யம் என்று சொல்லிக்கொண்டு அங்கு யாரும்வரவேண்டாம். கால்நடை மருத்துவர் என்று வந்து கரைச்சல் தரவேண்டாம். குளிப்பாட்டிவிடுகிறேன் என்று சோப்புடன் வரவேண்டாம். விலங்கு உரிமை காப்போம் என கொடி பிடித்துக்கொண்டு வரவேண்டாம். நாம் அங்குஇயற்கையுடன்இயைந்துவாழ்ந்து இயற்கையடைய விரும்புகிறோம். அறுகம் புல்லும் முட்புதர்களும் எமக்கு இயற்கை வைத்தியம் செய்யும். வேட்டையாடி உண்ண இரைகளங்கில்லையதனால்உங்கள்வீட்டுமிச்சங்களை எங் களுக்கு விட்டெறிந்தால் போதும். சிவபூமியிலே நல்ல உள்ளங்கள் எமக்காக சரணாலயம் அமைக்கின்றனவாம்நாம்புத்திகெட்டுவந்தவழி ஓடாமல்வேலியிட்டுள்ளனவாம். ஒதுங்க நிழலும் நக்க நீருமுண்டாம் ஒடித்திரிய இடமும் உருண்டுபுரழ மணலுமுண்டாம் பசியாற உணவுமுண்டாம் வேறன்ன வேண்டும் இப்பரதேசிகட்கு. புண்ணியம்கிடைக்கும்உமக்குஅங்கே எம்மை கரை சேர்த்தால். அதற்கு எமக்கு வழிகாட்டுங்கள். ஏதோ செய்யும் அந்த நல்ல உள்ளங்களை சட்டத்தை சொல்லி நோகடிக்காதீர். உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாதீர்.

ஒரு காலத்தில் கழுத்தில் கம்பி போட்ட உள்ளூராட்சியினரே காலத்தின் தேவையறிந்து சட்டத்தில் திருத்தம்செய்து கழுத்தில் கம்பிபோட்டு எம்மைக் கருணைக்கொலை செய்யீரோ. பஞ்சணையும் பால்சோறுமா கேட்கிறோம். இல்லை. உங்கள் பகுதியில் பூங்காக்கள் அமைக்கும் நீங்கள் ஒதுக்குப்புறத்தில்குப்பைகொட்டுமிடத்தில் கூடடித்துநலமடித்துவிட்டால்யாருக்கும் தொல்லையின்றி அங்கு கழிவுணவை உண்டு கழிப்புடன் காலம் கழித்து மடிவோம் நாம்.

ஆறறிவுப் பிராணிகளே ஐந்தறிவின் குரல் கேளீரோ.? ஆல்லது அன்றாடம் அடிபட்டு கடிவாங்கி விழுந்து முறிந்து ஆஸ்பத்திரியில் கிடந்து நொந்து முடமாகி உயிர்விட்டு வீணாய்ப் போவீரோ?

*(கட்டுரையாளர் ஓய்வு பெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்)*





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swohpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# அரசின் வரி அதிகரிப்புக் கொள்கை வேறு விளைவுகளுக்கு வழிவகுக்கும்

## ஹக்கீம் சுட்டிக்காட்டு



ஊழியர்களிடமிருந்து ஒருலட்சம் ரூபா வரி அதிகரிப்பை அரசாங்கம் ஓர் எதிர்பார்ப்பைநோக்கிசெயற்படுத்தினாலும் அது வேறுவிதமான விளைவுகளுக்கு வழிவகுக்கின்றன. அதனால் அரசாங்கம் அவர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் அல்லது வரியைக் குறைக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற, அண்மையில்ஜனாதிபதிநாட்டுமக்களுக்கு நிகழ்த்தியஉரைமீதானசபைஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

நாடு சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து பல்வேறுபட்ட மக்கள் கலந்து காணப்படுகின்றனர். இங்கு ஒரு கலாசாரம் காணப்படுகிறது. அதனால் நாங்கள் இவ்வாறான கலந்துபட்ட கலாசாரம் காணப்படும் வேளையில், நாங்கள் எங்களுடைய கருத்துக்களை முன்வைப்பதற்கும் ஜனாதிபதி பல்வேறு விடயங்களை செய்வதற்கும் முயற்சிக்கிறார்.

ஜனாதிபதி அன்று பதவியில் இருக்கும்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் கடந்த காலத்தில் அவரை விமர்சித்தார்கள். ஆனால் அவர் இன்று நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கும்போது, அவர்கள் அனைவரும் தற்போது நண்பர்களாகி விட்டார்கள். ஜனாதிபதியின் புகழ்பாடி வருகிறார்கள்.

அத்துடன் ஜனாதிபதியின் முயற்சிகளில் சில பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யக் காரணமாவதுடன் அதேநேரம் நேர் மறையான விடயங்களும் காணப்படுகின்றன. ஊழியர்களிடமிருந்து ஒருலட்சம் ரூபா வரியாக அறவிடப்படுகிறது. இதனால் அவர்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக ஊழியர்கள் வேறுவிதமாகசம்பாதிக்கவெளிநாடுகளுக்கு செல்கின்றனர். வேறு தொழில் துறைகளை நாடுகின்றனர். அதனால் அவர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் அல்லது வரிகளைக் குறைக்க வேண்டும். பெரியளவிலான ஊழியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர்.

அத்துடன் அன்னியச் செலாவனயை அதிகரித்துக்கொள்ள அரசாங்கம் ஏற்றுமதிகளை அதிகரித்துக்கொள்ள வேண்டும். வரி அதிகரிப்பை அரசாங்கம் ஓர் எதிர்பார்ப்பை நோக்கி செயற்படுத்தினாலும் அது வேறுவிதமான விளைவுகளுக்கு வழிவகுக்கின்றன.

மேலும் உயர்கல்வியைப் பெறுகின்ற கவர்ச்சிகரமான இடமாக இலங்கை மாறவேண்டும். அதற்காக முக்கியமான சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. சிலர் இதில் இடதுசாரிக் கொள்கையைப் புகுத்த முயற்சிக்கின்றனர். இலங்கை உயர்கல்விக்கான சிறந்த இடமாக அமையவேண்டும்.

வெளிநாட்டு மாணவர்களைக் கவரவேண்டும். தனியார் துறைக்குப் போட்டியாக அமைய வேண்டும். நாட்டில் இருக்கும் உயர் கல்வி சேவையை வழங்கும் நிறுவனங்கள் அவர்கள் வழங்கும் பட்டம் தரம் வாய்ந்ததாக அமையவேண்டும். அந்தத் தரம் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் உயர்கல்வித்துறையில் சரியான முதலீட்டைப் பெற்றுக்கொள்ள முடியாது.

அத்துடன் அரசாங்கம் உற்பத்தியைப் பெறுக்குவதற்கு விவசாயிகளுக்கு அழைப்புவிடுத்தபோதும் கடந்தபோகத்தில் விளைந்த நெல்லைக்கூட விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள் தடுமாறிக்காணெ;டிருக்கிறார்கள். அவர்களின் நெல்லை விற்பனை செய்வதற்கான விற்பனை விலை மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகிறது.

அடுத்த போகத்தில் விவசாயம் செய்வதா இல்லையா என அவர்கள் தடுமாறிக்கொண்டிருக்கின்றனர். எனவே, அரசாங்கம் மிக விரைவாக உத்தரவாத விலையை நிர்ணயித்து கடந்த போகத்தில் உற்பத்தி செய்த நெல்லைக் கொள்வனவு செய்ய மிக விரைவாக மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொன்கிறேன். - என்றார். (05)

# 1,700 கோடி டொலர் வெளிநாட்டுக் கடன்களை குறைக்கும்படி கோரிக்கை விடுத்துள்ளோம்

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் தெரிவிப்பு



வெளிநாட்டு அரசமுறை கடன்களில் 17 பில்லியன் டொலரை ஐந்து வருடகாலத்துக்கு குறைத்துக் கொள்ளுமாறு பிரதான நிலை கடன் வழங்குநர்களிடமும்,சர்வதேசபிணைமுறி விநியோகஸ்தர்களிடமும் வலியுறுத்தியுள்ளோம்.

வங்கிகட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தேசிய கடன் மறுசீரமைக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியவை வருமாறு -

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண ஒத்துழைப்பு வழங்குங்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சகல அரசியல் கட்சிகளிடம்பலமுறைவலியுறுத்தினார். நெருக்கடியான சூழலில் எவரும் ஒத்துழைப்பு வழங்கவில்லை.

ஆனால் தற்போது குறைகளை மாத்திரம் முன்வைக்கிறார்கள். அரசாங்கத்தின் செயற்பாடுகளை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் மக்கள் தம்மை மறந்துவிடுவார்கள் என்ற அச்சத்தில் நாங்களும் இருக்கிறோம் என்பதைக் காண்பிக்கும் வகையில் எதிர்க்கட்சியினர் தற்போது செயற்படுகிறார்கள்.

தேசிய கடன் மறு சீரமைப்பு தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் தற்போது குறிப்பிடப்படுகின்றன. இலங்கை சர்வதேசத்திடமிருந்து இன்றளவில் 80 பில்லியன் டொலர்களை பெற்றுக்கொண்டுள்ளது.

வெளிநாட்டுகடன்களை மறுசீரமைக்க இரு மற்றும் பல்தரப்பு மட்டத்தில் பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளது. கடன் மறுசீரமைப்பு சாதக மான தன்மையில் உள்ளது.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பின் போது ஐந்து வருட காலத்தை உள்ளடக்கிய வகையில் 17 பில்லியன் டொலரை குறைத்துக் கொள்ளுமாறு பிரதான நிலை கடன் வழங்குநர்கள், பிணைமுறி விநியோகஸ்தர்களிடம் வலியுறுத்தியுள்ளோம்.

வெளிநாட்டுகடன்களை மறுசீரமைக்கும் போது தேசிய கடன்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும்எனயோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. வங்கிகட்டமைப்புக்குப் பாதிப்புஏற்படாதவகையில் தேசியகடன்களைமறுசீரமைக்க விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரப் பாதிப்பால் மொத்த சனத்தொகையில் பெரும்பாலானோர் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

ஏழ்மை நிலையில் உள்ளோருக்கு நிவாரணம் வழங்க புதிய மானிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. யாருக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பதில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

ஊழலை இல்லாதொழிக்க விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. வெகுவிரைவில் ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் நிறைவேற்றப்படும்.

நாடுதற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது. உணவு பணவீக்கம், உணவல்லாத பணவீக்கம், வட்டி வீதம் ஆகியன குறைவடைந்துள்ளன. அரசாங்கத்தின் செயற்பாடுகள் சிறந்தது என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆகவே, அரசாங்கத்துக்கு சார்பாக மக்கள் செயற்படுவார்கள். -என்றார். (05)

# 50 ரூபா சம்பள அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்த நவீன் ஆளுநராக நியமிக்கப்பட்டமை முறையற்றது

## இராதாகிருஷ்ணன் சுட்டிக்காட்டு



பெருந்தோட்டமக்களுக்கு 50 ரூபா சம்பளத்தை அதிகரிக்க இடமளிக்காத நவீன் திஸாநாயக்க சப்ரகமுவ மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளமை முறையற்றதாகும். 200 வருட கால வரலாற்று பின்னணியை மலையக மக்கள் பூர்த்தி செய்துள்ள போதும் துயரங்களில் இருந்து விமோசனம் கிடைக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற்றியவை வருமாறு -

கடந்த ஆண்டு சமூக கட்டமைப்பின் நிலைமைக்கும், தற்போதைய நிலைமைக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். 2048 ஆம் ஆண்டு நாட்டை அபிவிருத்தி செய்வதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2004 ஆம் ஆண்டு பிரதமராக பதவி வகித்த போது 2025 ஆம் ஆண்டுநாட்டைஅபிவிருத்தி செய்வதாகக் குறிப்பிட்டார். தற்போது ஜனாதிபதியாக பதவி வகிக்கும் போது 2048 ஆம் ஆண்டு நாட்டை அபிவிருத்திசெய்யமுடியும்எனக் குறிப்பிடுகிறார்.

நாட்டை அபிவிருத்தி செய்யும் காலத்தை அறிவித்துக் கொண்டு ஜனாதிபதி காலத்தைக் கடத்த முடியும். ஆனால் அதுவரை நாட்டு மக்களால் எவ்வாறு வாழ முடியும் என்பதை சிந்திக்க வேண்டும். நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தற்போதைய பொருளாதார பாதிப்பால் மலையக மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மூன்று வேளை உணவு தற்போது ஒருவேளையாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக இதுவரை நடைமுறைக்கு சாத்தியமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பெருந்தோட்ட மக்கள் 200 வருட கால வரலாற்று பின்னணியைப் பூர்த்தி செய்துள்ளார்கள். இருப்பினும் அவர்கள் படும் துயரத்துக்கு விமோசனம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. பெருந்தோட்ட மக்களுக்கு 50 ரூபா சம்பளத்தை அதிகரிக்க இடமளிக்காத நவீன் திஸாநாயக்க சப்ரகமுவ மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். இது முறையற்றதாகும்.

தனது வீட்டையும், அங்கிருந்த 3000 புத்தகங்களையும் போராட்டக்காரர்கள் எரித்தார்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலை கண்ணீர் வடிக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் ஆட்சியில் இருந்த போதுதமிழர்களின்பொக்கிஷமாகக்கருதப்பட்டயாழ்.நூலகசாலை தீயிடப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்ன நடவடிக்கை எடுத்தார் ஒன்றும் இல்லை.

கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட நியமனம்முரண்பட்டதாகஉள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒருவருக்கு நுவரெலியா மாவட்டத்துக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மாகாணங்களுக்கு மாகாணம் தொடர்பற்ற வகையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

40 ஆயிரம் சம்பளத்துடன் தற்போதைய வாழ்க்கை செலவுக்குமத்தியில்தூரபகுதிகளுக்குநியமனம்வழங்கும் போது ஆசிரியர்களால் எவ்வாறு மன நிம்மதியுடன் சேவையாற்ற முடியும். ஆகவே, இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும். - என்றார். (05)

# தோட்டத்துறை அரச தோட்டக் காணிகளை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் திட்டம்

## வேலுகுமார் சுட்டிக்காட்டு



தோட்டத்துறையில் உள்ள அரச தோட்டக் காணிகள் எந்தவித திட்டமிடலும் இல்லாமல் துண்டுபோட்டு விற்பதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஆனால், ஓய்வுபெற்றுள்ள தொழிலாளர்களின்பணிக்கொடை போன்ற கொடுப்பனவு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை, இவ்வாறான நிலையில் இந்த நாடு ஜனாதிபதி எதிர்பார்க்கும் 2028 இல் எவ்வாறு அபிவிருத்தியடையும் என எதிர்பார்க்க முடியும் எனக் கேட்கிறோம் என எதிர்க்கட்சி உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அண்மையில் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு நிகழ்த்திய உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

அரசாங்கம் தொழில்சார் நிலையில் உள்ளவர்களுக்கு வரி அதிகரிப்பை மேற்கொண்டதன் விளைவாக வைத்தியர்கள், பொறியியலாளர்கள் உட்பட துறைசார் நிபுணர்கள் நாட்டை விட்டுவெளிநாடுகளுக்குசெல்லும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அனைத்து துறைகளிலும் தொழில்சார் வல்லுநர்களின் குறைபாட்டைக் காண்கிறோம்.

இவ்வாறானநிலையில்ஜனாதிபதியின் இலக்கான 2048 இல் இலங்கை எவ்வாறு அபிவிருத்தி அடைந்த நாடாக மாற முடியும்.

அதேபோன்றுஇன்றுடொலரின் பெறுமதி ஒவ்வொரு நாளும் மாற்றமடைகிறது. அதனை ஒரு நிலையாக வைத்துக்கொள்ள முடியாதநிலைஏற்பட்டிருக்கிறது. அதனால் உற்பத்தி துறையில் இருப்பவர்கள்தங்களின்உற்பத்திப் பொருள்களுக்கு ஒரு நிலையான விலையை நிர்ணயிக்க முடியாத நிலையை அரசாங்கம் ஏற்படுத்தி இருக்கிறது.இவ்வாறானநிலையில் எவ்வாறு இந்த நாட்டை அபிவிருத்தி அடைந்த நாடாக மாறப்போகிறது.

அத்துடன்தோட்டத்துறையில் உள்ள அரச தோட்டங்களை பார்க்கும்போது, எந்தவித திட்டமிடலும் இல்லாமல் தோட்டக்காணிகள் துண்டுப்போட்டு விற்கப்படுகின்ற, குத்தகைக்கு வழங்கப்படுகின்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.ஆனால்அங்கிருக்கின்ற தொழிலாளர்கள் ஓய்வு பெற்றவர்களின் பணிக்கொடை, ஈபி.எப். ஈடிஎப், கொடுப்பனவு போன்ற பிரச்சினைகளைத் தீரப்பதற்கு எந்த வழிமுறையையும்அரசாங்கம்எடுப்பதை காணக்கூடியதாக இல்லை. இவ்வாறானநிலையில்இந்தநாடு எவ்வாறு அபிவிருத்தியடையும் என்ற கேள்வியை நாங்கள் அரசாங்கத்திடம் கேட்கிறோம். - என்றார். (05)

# இலங்கையின் பொருளாதார மீட்சியை துரிதப்படுத்தும் வழிமுறைகள் என்ன?

## வர்த்தக இராஜதந்திரிகளுடன் மிலிந்த மொரகொட ஆய்வு

இலங்கையின் பொருளாதார மீட்சி செயன்முறையைத் துரிதப்படுத்துவது தொடர்பாக சர்வதேச நாடுகளின் வர்த்தக உயர்ஸ்தானிகர்கள் மற்றும் இராஜதந்திரிகளுடன் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளார்.

சர்வதேச நாடுகளால் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும்வர்த்தகஉயர்ஸ்தானிகர்கள் மற்றும் இராஜதந்திரிகளுக்கும் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவுக்கும் இடையிலான சந்திப்பொன்று புதுடில்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் பெலாரஸ், சைப்ரஸ், எதியோப்பியா, ஜோர்தான், கென்யா, அயர்லாந்து, பேரு மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் வர்த்தக உயர்ஸ்தானிகர்கள் மற்றும் இராஜதந்திரிகள் பங்கேற்றிருந்தனர்.

இலங்கைக்கும் மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் பொருளாதாரத்தொடர்புகளை மேலும் விரிவுபடுத்திக்கொள்வதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்வதே இந்தச் சந்திப்பின் பிரதான நோக்கமாகக் காணப்பட்டது.

அதன்படி இச்சந்திப்பில் கலந்துகொண்ட இராஜதந்திரிகளுக்குஇலங்கைக்கும்சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் எட்டப்பட்ட இணக்கப்பாடு, இந்திய ரூபா மூலமான வர்த்தக நடவடிக்கைகள், இந்தியாவுடனான பொருளாதார செயற்திட்டங்கள் என்பன தொடர்பில் விளக்கமளித்த உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைவரம் மற்றும் நிதியியல் நிலைவரத்தை மேம்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்பன பற்றியும் விளக்கமளித்தார்.

அதேவேளை இந்தச் சந்திப்பின்போது வர்த்தகத்துடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையின் பொருளாதார மீட்சி தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மேலும் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியை அடைந்துகொள்வதற்கு நாடுகளுக்கு இடையில் வலுவான பொருளாதாரத் தொடர்புகள் கட்டியெழுப்பப்படவேண்டியது அவசியம் என்று இராஜாதந்திரிகளிடம் சுட்டிக்காட்டிய உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையில் வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக்கொள்ளமுடியும் என்று குறிப்பிட்டார்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் பதவியேற்பு







(அகீல்)

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் 25 ஆவது வெள்ளிவிழா வருட (2023 / 2024) புதிய நிர்வாகிகளின் பதவியேற்பு விழா வெகுவிமரிசையாக நடைபெறவிருகின்றது. நாளைகல்முனை கிறீன் பார்க்றிசோட், மண்டபத்தில் விழா நடைபெறும்.

கழகத்தின் 2023 /2024 வெள்ளி விழா வருட புதிய நிர்வாக சபை பதவியேற்புக்கான இந்த விழாவில், தெரிவு செய்யப்பட்டுள்ள இரண்டாவது உதவிமாவட்ட ஆளுநர் லயன் கயா உபசேன பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

கழகத்தின் புதிய நடப்பாண்டுக்கான (2023/ 2024) தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள லயன் பொறியியலாளர் எம்.சுதர்சன், செயலாளராக தெரிவு செய்யப்பட்டுள்ள லயன் ஏ.எல்.எம்.பாயிஸ், பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள லயன் எம்.பரமேஸ்வரநாதன் ஆகியோருட்பட தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய நிர்வாகிகளுக்கு இரண்டாவது உதவி மாவட்ட ஆளுநர் லயன் கயா உபசேன விழாவில் உத்தியோக பூர்வமாகப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்.

கல்முனைப் பிராந்தியத்தில் கடந்த 25 வருடகாலமாக இன மத பேதங்களுக்கப்பால் தேவைகளுடைய பல்வேறு தரப்பினருக்கும் கல்முனை நகர லயன்ஸ் கழகம் அளப்பரிய சேவைகளை ஆற்றிவருகின்றது.

குறிப்பாக சுனாமி அனர்த்தம் போன்ற சந்தரப்பங்களில் எல்லாம் பாமர மக்களை நாடிச் சென்று உதவிகள், நிவாரணங்கள் வழங்கி மக்களை ஆற்றுப்படுத்திய முதன்மைப் பெருமையும் இக்கழகத்திற்கு உண்டு.

# பாதயாத்திரீகர்களுக்கு உணவுப் பொதி உதவிகள்

(வி.ரி. சகாதேவராஜா)

மக்கள்வங்கியின்இந்து மாமன்றத்தினர்வருடாந்தம் நடத்திவரும் கதிர்காம பாதயாத்திரீகர்களுக்கான உலருணவுப்பொதி வழங்கி வைக்கும் நிகழ்வு இம்முறையும் உகந்தையில் நடைபெற்றது. அம்பாறை பிராந்திய முகாமையாளர் திருமதி எம் ஏ. அமரசிறி தலைமையில் உணவுப்பொதிகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் அம்பாறை உதவி பொது முகாமையாளர் டபிள்யூ. முத்துகலமட்டக்களப்பு உதவி பொதுமுகாமையாளர் என் அருட்செல்வம் அம்பாறை பிராந்திய உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள் .

பாதயாத்திரிகர்கள் 500 பேருக்கு மக்கள் வங்கி இலச்சினை பொறித்த பாக்குடன் 500 உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. குமண தேசிய சரணாலய முன்றலில் வைத்து மக்கள் வங்கியின் இந்து மாமன்ற உறுப்பினர்களால் இப்பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இதற்கு மக்கள் வங்கியின் அம்பாறை மொனராகலை யாழ்ப்பாணம் மட்டக்களப்பு வன்னி ஆகிய பிரதேச மக்கள் வங்கியின் இந்து மாமன்ற உறுப்பினர்கள் பங்களிப்புச் செய்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மின்பாவனை குறித்த நடமாடும் சேவை

திருகோணமலை மாவட்டசெயலகம்,இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் திருகோணமலை மின்சார சபையின் ஏற்பாட்டில் மின்சார பாவனை குறித்த நடமாடும் சேவையானது வியாழக்கிழமை சேருவில பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

இந்நடமாடும் சேவையானது திருகோணமலை மாவட்டசெயலகஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றமையைத் தொடர்ந்து சேருவிலபிரதேசசெயலகத்திலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

மின் கணக்கின் பெயர் மற்றும் முகவரியை மாற்றுதல், மின்சார மெனு, மின் கம்பங்கள் மற்றும் கேபிள் லைன்கள், மின்சார அனுமதி மற்றும் தொடர்புடைய இழப்பீடு, மரக்கிளைகளை வெட்டுதல், புதிய மின் இணைப்புகள், அமைப்பை மாற்றுதல், மின் கட்டணம் மற்றும் மின் தடை போன்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கானசிறந்த தொரு தீர்வாக இந்நடமாடும் சேவை இடம்பெற்றது .

இந்நடமாடும் சேவையில் நுகர்வோர் விவகார பிரிவு மக்கள் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு பிரதிப் பணிப்பாளர் ரொான் வீரசூரிய, திருகோணமலை பிரதான மின் பொறியியலாளர் ஜ.எஸ் பீலிசன், துறைசார் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு ஆளுநர் - ஜப்பான் அமைச்சர் அயலுறவுத்துறை அமைச்சில் சந்திப்பு

(ஹஸ்பர்)

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து வெளியுறவுத்துறை துணை அமைச்சர் ஷூன்சுகே டேக்கி கிழக்கு மாகாண ஆளுநருக்கு இடையில் விசேட கலந்துரையாடலொன்று வெளியுறவு அமைச்சில் இடம்பெற்றது.

ஜப்பானுக்கு உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வெளியுறவுத்துறைக்கான துணை அமைச்சர் ஷூன்சுகேடேக்கியைசந்தித்துகலந்துரையாடல் மேற்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் போது, இலங்கை -மீ ஜப்பான் இடையே நிலவும் நீண்டகால நட்புறவை இருவரும் நினைவூட்டியதுடன் எதிர்காலத்தில் நட்புறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மாகாண ஆளுநர் என்ற வகையில் மாகாணத்தின்வளர்ச்சிக்காக நீங்கள்எடுக்கும் முயற்சிக்கு ஜப்பான் அரசு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும், தங்களுடைய முயற்சியை ஜப்பான் அரசு பாரட்டுவதாகவும் ஷூன்சுகே டேக்கி, செந்தில் தொண்டமானிடம் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் தலைமையின் கீழ் நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும்திட்டங்கள்சிறப்பாக உள்ளன எனவும் ஐ.எம்.எப். நிதி வசதியை பெற்றுக்கொள்வதற்கும், கடன் மறுசீரமைப்புத் திட்டங்களின் போதும் இலங்கை ஜனாதிபதியின் வழிகாட்டலின் பேரில் அர்ப்பணிப்புடன் இலங்கைநாட்டின்அதிகாரிகள்பணியாற்றினா் எனவும் ஷூன்சுகே டேக்கி ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த பெப்ரவரி மாதம் சுதந்திர தின விழாவில் கலந்துகொள்ள இலங்கை வந்த வெளியுறவுத்துறைக்கான துணை அமைச்சர் ஷூன்சுகே டேக்கிக்கு சிறந்த வரவேற்பை இலங்கை அளித்திருந்தமைக்காக அவர் பாராட்டையும் நன்றியையும் ஆளுநரிடம் தெரிவித்திருந்தார்.

மேலும் இரு நாடும் இணைந்து மீன்பிடித்துறையுடன் தொடர்புடைய துறைசார் தொழிலை மேம்படுத்துவது குறித்தும், கனிம வளங்கள் தொடர்பாக ஆராய்ந்து அதனை செயற்படுத்த ஜப்பான் அரசு பங்களிப்பு அளிக்க வேண்டும் என செந்தில் தொண்டமான் கோரிக்கை விடுத்தார்.

அக்கோரிக்கையை ஏற்று, அதற்கு சாதகமான பதிலளித்த ஷூன்சுகே டேக்கி ஜப்பான் தனது முழு ஆதரவையும் வழங்கும் என உறுதியளித்தார்.

இலங்கையின் கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க, ஜப்பான் சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என செந்தில் தொண்டமான் வேண்டுகோள்விடுத்தார். சுற்றுலாத்துறையை ஊக்குவிக்க ஜப்பான் தனது பூரண ஒத்துழைப்புகளை வழங்கும் எனவும் ஆளுநரிடம் ஷூன்சுகே டேக்கி உறுதியளித்துள்ளார். (05)



# சாய்ந்தமருது பிரதேச செயலகம் அம்பாறை மாவட்டத்தில் முதலிடம்

நூருல்

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கொடி விற்பனையில் சாய்ந்தமருது பிரதேச செயலகம் கூடுதல் நிதியை சேகரித்து அம்பாறை மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இந்த மாவட்ட வெற்றியை கொண்டாடும் நிகழ்வு சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத் தலைமையில் வியாழக்கிழமை வங்கிச் சங்க கூட்டம் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ. சி.ஏ.நஜீம், சமுர்த்தி வங்கி முகாமையாளர் எம்.ஐ.ஹிதாயா, கருத்திட்ட முகாமையாளர் எஸ்.றிபாயா, வலய உதவியாளர் எம்.எஸ்.எம். நௌாட,கருத்திட்ட உதவியாளர் எம்.எம்.எம்.முபாறக், சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜ.ஃபர் உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.சி.ஏ.நஜீம் உள்ளிட்ட சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கேக் வெட்டி வெற்றியின் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி பிரிவால் புதைத்தலுக்கு எதிராக பல்வேறு நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் அனுசரணையில் புகைத்தல் எதிர்ப்பு பேரணியும் இடம்பெற்றது.

கொடி விற்பனைக்கு ஒத்துழைப்பு வழங்கிய சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் நிர்வாகிகள் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம் நன்றிகளை இதன்போது தெரிவித்தார்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தின கொடி விற்பனையினை மே–31 தொடக்கம் ஜூன்–14 ஆம் திகதி வரை தேசிய ரீதியில் அமுல்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (05)









# 60 குருதிக் கொடையாளர்கள் கல்முனையில் கௌரவிப்பு

## உலக சாதனை படைத்த கிரண்யாஸ்ரீயும் ஒருவர்

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை ஆதரவைத்தியசாலையில் 60 குருதிக்கொடையாளர்களை கௌரவித்த நிகழ்வு வியாழக்கிழமை இடம் பெற்றது.

வைத்தியசாலையின் பணிப்பாளர் ருத்துவர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வின்போது வைத்தியசாலைக்கு தொடர்ந்து குருதியை நன்கொடையாக வழங்கிய 60 கொடையாளர்களுக்கு பாராட்டு நற்சான்றுகளும் நினைவு சின்னங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஜெ.மதன் வைத்திய நிபுணர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் வைத்தியசாலை குழுவினரும் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனை, துரைவந்திமேடு எனும் கிராமத்தைச் சேர்ந்த ஜனாசுகிர்தன் கிரண்யாஸ்ரீ எனும் நான்கு வயதுச்சிறுமியும் கௌரவிக்கப்பட்டார்.

இவர் மாபெரும் இரண்டு உலக சாதனைகள் படைத்துள்ளார்.. இவர் தனது இரண்டு கைகளாலும் A-Z வரை குறுகிய நேரத்தில் எழுதி அவர் படைத்த அவரின் சாதனையை அவரே முறியடித்து 2 உலக சாதனைகளைப் படைத்துள்ளார். இவர் கல்முனை ஆதார வைத்திய சாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் ஜெயந்தினி ஜனா சுகிர்தனின் புதல்வி.

# ஹோட்டல் வலையமைப்பு அமைப்பு திருகோணமலையில் தொடக்கம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட ஹோட்டல் வலையமைப்பு அங்குரார்ப்பண வைபவம் வியாழக்கிழமை திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் இடம் பெற்றது. கிழக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் ஏ.பி.மதனவாசன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் சுற்றுலாத்துறை விருத்தி மற்றும் குறித்த வலையமைப்பை பதிவு செய்வதன் ஊடாக திருகோணமலை மாவட்டத்தின் சுற்றுலாத் துறை தொழில் வாண்மையான துறைகளில் முன்னேற்றம் காண்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இதில் தலைவராக திருப்பதி துரையும்,செயலாளராக எஸ்.சக்தீபன்,பொருளாளராக எஸ்.பிரியதர்சினி உட்பட ஏனைய நிர்வாகக் குழு உறுப்பினர்கள்,ஆலோசனை குழு என தெரிவுகள் இடம் பெற்றன.

இதில் மாகாண சுற்றுலா பணியக பொது முகாமையாளர் டாக்டர் ஞானசேகரம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM
FAAST-F2T
80-85 KM
FREEDOM
70-75 KM
Rs.550,000/-
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்

காலைக்கதிர்
Kalaikkathir

# போர்ட் சிட்டிக்கு டிஜிற்றல் மயமாக்கிய தண்ணீர் விநியோகம் குறித்து ஆராய்வு

## அமைச்சர் ஜீவன் தலைமையில் நடந்தது





பொருளாதார அபிவிருத்தி, சர்வதேச முதலீடுகள் மற்றும் நீர்வழங்கல் துறையை டிஜிற்றல் மயமாக்குதல் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமானஜீவன்தொண்டமான்தலைமையில் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவின் பங்கேற்புடன் நடைபெற்றது. நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், முதலீட்டு சபை அதிகாரிகள், கொழும்பு துறைமுக நகர் ஆணையாளர், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் உட்பட துறைசார் அதிகாரிகள் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

கொழும்பில் துரித கதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 'போர்ட்சிட்டி'க்கு நீர்வழங்கலின்போது முழுமையாக டிஜிற்றல் முறைமையை பயன்படுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

'நீர்வழங்கல் அதிகார சபை கடந்த காலங்களில் நஷ்டத்தில் இயங்கி வந்தாலும், அதனை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்றியமைப்பதே எனது இலக்கு. அதற்கேற்ற வகையில் கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன. எனவே, துறைமுகஅபிவிருத்தி நகருக்கு நீர் வழங்கலின்போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதற்காக திட்டம் வகுக்கப்படுகிறது' என இதன்போது அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இதனையடுத்து நீர்வழங்கல் அமைச்சும், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சும் இணைந்து ஒரு குழுவை நியமிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டது. (05)

# பொருளாதார நெருக்கடியில் நலிவுற்ற பெண் முயற்சியாளர்களை ஊக்குவிக்க சிறப்புதிட்டம்



ஐக்கியநாடுகள்சபையின்பெண்கள் பிரிவு நலிவுற்றபெண் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் சிறப்பு திட்டத்தை இலங்கையின் பல்வேறுமாவட்டங்களில் நடைமுறைப்படுத்துகின்றது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டபெண் முயற்சியாளர்களை வலுப்படுத்தும் செயல்திட்டத்தின் ஒருசெயற்பாடாக முல்லைத்தீவு மாவட் டத்துக்கான கலந்துரையாடல், மாவட்டபதில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில், அண்மையில் முல்லைதீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

பிரதானமாக கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, வெலிஓயா ஆகியபிரதேச செயலகபிரிவிலுள்ள பெண் முயற்சியாளர்கள் இந்தத் திட்டத்திற்கு உள்வாங்கப்படவுள்ளனர்.

முயற்சியாளர்களுக்கான பயிற்சி வழங்கப்படுவதுடன் வியாபாரதத்தை மேம்படுத்திக்கொள்வதற்கான பொருள்கள்மற்றும்இயந்திரங்களும்வழங்கப்பட உள்ளன.

பொருளாதார ரீதியாக பெண்களைவலுப்படுத்தி அதனுடாக குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்துவதே திட்டத்தின் பிரதானநோக்கமாக காணப்படுகின்றது.

இந்தத்திட்டத்தினுடாகஉற்பத்திமேம்படுத்தல், நிதிமுகாமைத்துவம், சந்தைப்படுத்தல் உட்படமேலும் பல பயிற்சிகள் முயற்சியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்வில் ஐக்கியநாடுகள் சபையின் பெண்கள் பிரிவின் திட்ட இணைப்பாளரும், திட்டஆலோசகருமான பாலமுரளி, திட்டஉத்தியோகஸ்தர் பிரதீபாகுலசேகர உட்படபலர் கலந்துக்கொண்டனர். (05)

# 'ஜீன் 30' வங்கிகளுக்கு விசேட விடுமுறை

ஜீன் 30 விசேட வங்கி விடுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள்அமைச்சர்தினேஷ் குணவர்த்தனவால் அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹஜ் பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 29 ஆம் திகதி வங்கிகளுக்கு விடுமுறையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் இரத்ததானம்

*யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் பருத்தித்துறை பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலகத்தில் வியாழக்கிழமை இரத்ததான நிகழ்வு நடைபெற்றது.*

*பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியுடன் இணைந்து இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.*

*பருத்தித்துறை பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் தலைவரும் கிராம அலுவலருமாகிய அரியகுமார் ரதீஸ்கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி, உதவி பிரதேச செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் கணக்காளர் உட்பட பிரதேச செயலக ஊழியர்கள் கலந்துகொண்டனர்.*

*இந்தக் குருதிக்கொடை நிகழ்வில் பிரதேச செயலக ஊழியர்கள் 19 பேர் குருதி வழங்கினர்.*

# சவுதி தூதுவராலய அனுசரணையில் அல்-குர்ஆன் மனனப் போட்டி – 2023

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து இலங்கையிலுள்ள சவுதி அரேபிய தூதுவராலயத்தின்அனுசரணையில்முதன் முறையாக தேசிய ரீதியில் அல்-குர்ஆன்மனனப்போட்டியொன்றை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளன. இப்போட்டியினை ஜூலை கொழும்பில் நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இப்போட்டிகள்முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளை மையப்படுத்தி ஆண், பெண் இரு பாலாருக்கும் நான்கு பிரிவுகளாக நடத்தப்படுவதுடன், மொத்தம் 8 பிரிவுகளில் போட்டிகள் இடம்பெறும். (ஆண்கள் பிரிவுகள் - 04, பெண்கள் பிரிவுகள் -04). மேற்படி போட்டிநடைபெறும்காலம் மிகக் குறுகியது என்பதனால் திணைக்கள களஉத்தியோகத்தர்களின் ஊடாக விண்ணப்பம் தொடர்பான விடயங்கள் 'வட்ஸ்அப்'மூலமாகமுஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில்பதிவுசெய்யப்பட்டபாடசாலைகளுக்கு அறிவிக்கநடவடிக்கை மேற்கொள்ளப்படடுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் 05வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவதுடன், சவுதி அரேபிய தூதரகத்தின் மூலமாக வெற்றியாளர்களுக்குப் பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

# மந்தபோசணையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நியூஸிலாந்து உதவி!

மொனராகலை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் மந்தபோசணையால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் போசணைத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமான நிதியுதவியை நியூஸிலாந்து வழங்கியுள்ளது. தீவிர பொருளாதார நெருக்கடியின்விளைவாகநாளாவியரீதியில்பெரும்எண்ணிக்கையானசிறுவர்கள் மந்தபோசணை குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளமை பல்வேறு அரசசார்பற்ற அமைப்புக்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

அதன்படி மொனராகலை மற்றும் நுவரெலியா ஆகிய இரு மாவட்டங்களிலும் தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளில் வசிக்கும் 5 வயதுக்கு உட்பட்ட சிறார்களில் மந்தபோசணை குறைபாட்டால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின்போசணைசார்தேவையைப்பூர்த்தி செய்வதற்கு அவசியமானநிதியுதவியை நியூஸிலாந்து அரசாங்கம் ஐக்கிய நாடுகள் உணவு மற்றும் விவசாய அமைப்பிடம் வழங்கியுள்ளது.

அந்நிதியுதவியைப் பயன்படுத்தி ஐ.நா உணவு மற்றும் விவசாய அமைப்பால் முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்திட்டத்தில் மேற்குறிப்பிட்ட இரு மாவட்டங்களையும் சேர்ந்த சுமார் 2250 குடும்பங்களில் மந்தபோசணை குறைபாட்டால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் உள்வாங்கப்பட்டிருப்பதுடன்அவர்களின் போசணைசார் தேவைகளைப் பூர்த்தி செய்தல், போசணை மிகுந்த உணவை பெற்றுக்கொள்வதற்கான அவர்களது இயலுமையை மேம்படுத்தல் ஆகியவற்றை முன்னிறுத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள இலங்கைக்கான நியூஸிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கேல் அப்லெற்றன், 'இலங்கையில் சிறுவர்கள் மந்தபோசணையினால் பாதிக்கப்படும் நிலையை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் ஐ.நா. உணவு மற்றும் விவசாய அமைப்பால் முன்னெடுக்கப்படும் இந்த முக்கிய செயற்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். இந்தச் செயற்திட்டத்தின் ஊடாக இலங்கையில் வறிய மற்றும் பின்தங்கிய நிலையிலுள்ள சிறுவர்களும் போசணைமிக்க உணவைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்படும். - என்று தெரிவித்துள்ளார். (05)

# அரச மொழிபெயர்ப்பாளர் சேவை விசேட தரத்திற்கு பதவி உயர்வு

சாய்ந்தமருதை பிறப்பிடமாகக் கொண்ட ஜனாப். அ.ற.முஹம்மது ஜாபிர் (காலம் சென்ற ஏ.ஏ. றஸ்ஸாக் மௌலவியின் மூத்த புதல்வர்) அரசாங்க மொழி பெயர்ப்பாளர் சேவையின் விசேட தரத்துக்கு 2019.07.01 ஆம் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

1999 இல் அரச கரும மொழித் திணைக்களத்தின் பட்டதாரி மொழிபெயர்ப்பாளராக (தமிழ் / ஆங்கிலம்) பதவியேற்று 2001ஆம் ஆண்டு வரை கல்முனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றினார்.

இன விவகார மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சிலும், கனிப்பொருள், மூலவள அபிவிருத்தி அமைச்சிலும் நீதி, சட்ட மறுசீரமைப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு பிரிவி லும் நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சிலும் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றியுள்ளார்.

பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் தரம் - 1 போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து 2005 ஆம் ஆண்டிலிருந்து நிந்தவூர் பிரதேச செயலகத்தில் மிக நீண்ட காலமாக அரசாங்க மொழிபெயர்ப்பாளராக ( தமிழ் / ஆங்கிலம்) தரம் - 1 இல் கடமையாற்றியுமுள்ளார்.

அத்துடன், இவர் நீதி அமைச்சின் சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளர் (தமிழ்/ஆங்கிலம்) என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவர் தற்பொழுது கல்முனை பிரதேச செயலகத்தில் கடமையாற்றி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# சமுர்த்தி வங்கியில் மானியம் பெறச் சென்ற வயோதிபப் பெண் விபத்தில் பரிதாபச் சாவு!

வீதி விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று இங்கிரிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சமுர்த்தி வங்கியில் மானியத்தைப் பெற்றுக்கொள்வதற்காகச் சென்ற 68 வயதான வயோதிபப் பெண்ணே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஹந்தபாங்கொட சமுர்த்தி வங்கிக்கு முன்பாக பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியமையால் விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் படுகாயமடைந்த நிலையில் ஹொரணை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் சிசிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

19 வயதான இளைஞர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளே விபத்துக்குக் காரணமாக அமைந்துள்ளது. விபத்தில் காயமடைந்த இளைஞரும் ஹொரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞருக்குச் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை எனவும், அவர் தனது தந்தைக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது எனவும் இங்கிரிய பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## நுகர்வோர் ....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

குறைந்த செலவில் உள்நாட்டு உற்பத்திகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்க வேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை போன்றே நுகர்வோரை பாதுகாப்பதற்கு பெருமளவான பணிகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. 1864பாண் கட்டளைச் சட்டத்தினை இரத்துச்செய்ய கோரப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சுக்கும், தேசிய அளவியல் திணைக்களத்திற்கும் வர்த்தக அமைச்சுக்கும் மேற்படிச் சட்டத்தினால் எவ்வித செயற்பாடுகளையும் முன்னெடுக்கமுடியாதுள்ளது. சுகாதார அமைச்சு தரத்தை கண்காணிக்கிறது.

நிறையை அளவியல் திணைக்களம் கண்காணிக்கிறது. பாண் கட்டளைச் சட்டம் மூன்று பகுதிகளாக பிளவுபட்டுள்ளது. அந்த சட்டத்தை இரத்துச் செய்து பாணிற்கான புதிய சட்டமொன்றை அமுல்படுத்த நாம் எதிர்பார்த்துள்ளோம். அரிசிக்கு அடுத்தபடியாக கோதுமை மாவினையோ மக்கள் அதிகம் பயன்படுத்துகின்றனர். அதுதொடர்பிலும் அதிக அவதானம் செலுத்த வேண்டும். எவ்வாறாயினும் பாண் உள்ளிட்ட உற்பத்தி பொருட்களின் விலைகளை குறைக்கப்புட்டுள்ளன. எதிர்வரும்நாட்களில்மேலும் குறைவடையும்.

பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு அதனுடன் தொடர்புடைய ஏனைய அமைச்சுக்களின் ஒத்துழைப்புக்களும் அவசியமாகும். அதேபோல பொது மக்களுக்கான சலுகைகளை வழங்க முன்வராத நிறுவனங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவும் பின்வாங்கப்போவதில்லை.

இந்நாட்டிலுள்ள சில நிறுவனங்கள்மக்களுக்கான சலுகைகளை பெற்றுக் கொடுக்வில்லை. ஆனால் அரசாங்கத்திடமிருந்து அவர்கள் சலுகைகளை பெற்றுக்கொண்டுள்ளனர். அதனால் அவர்கள் அதிகளவில் இலபாத்தையும் ஈட்டியுள்ளனர். அவர்கள் நாட்டு மக்களின் நிலைமை பற்றி சிந்திக்க வேண்டும்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு அத்தி யாவசிய பொருட்களின் விலை குறைப்பு மிகவும் அவசியமானாகும். நாட்டின் நிர்மாணச் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும். சாதாரண மக்களுக்குவீடுகளைநிர்மாணித்துக் கொள்வதற்கும், கழிப்பறைகளை நிர்மாணித்துக் கொள்வதற்குமான அவசியம் உள்ளது. அதனால் அநாவசியமான முறையில் விலைகளை அதிகரிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக கடுமையானசட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# பொருளாதார வளர்ச்சியைத் தனிப் பெருமானத்துக்கு கொண்டுவர நடவடிக்கை என்கிறார் அமைச்சர் நளின்!



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் மேற்கொள்ளப்பட்ட சரியான தீர்மானங்களின் காரணமாக அரிசி இறக்குமதி செய்வதற்கு செலவிடப்பட்ட 350 மில்லியன் அமெரிக்க டொலர்களை சேமித்துக்கொள்ள முடிந்துள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரே வழிக்கு என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் அமைச்சர் நளின் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் தற்போது பொருள்கள் இறக்குமதி செயற்பாடுகள் சிறந்த முறையில் இடம்பெறுகின்றன என்றும் நிறுவனங்களுக்கு அவசியமான கடன் பத்திரங்களை விநியோகிக்கும் செயற்பாடுகளும் வலுவாக முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

மேலும், ஒக்ரோபர் மாதமளவில் பொருளாதார வளர்ச்சியை தனிப் பெறுமானத்திற்கு கொண்டு வருவதற்கான இயலுமை கிட்டும் என நம்பிக்கை உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

விற்பனை செய்யப்படும் அனைத்து பொருள்களுக்குமான குறைந்த பட்ச சில்லறை விலையை நிர்ணயிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அவசியமானசூழல்தற்போது உருவாகியுள்ளது என்றும் பொது மக்களுக்கான சலுகைகளை வழங்க முன்வராதநிறுவனங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவும் பின்வாங்கப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். (05)

# யாழின் பெண்கள் பாடசாலைகளுக்கு பொலிஸார் விடுத்துள்ள அறிவுறுத்தல்



யாழ்.மாவட்டத்திலுள்ள பெண்கள் பாடசாலைகளில் மாணவிகளின் நலன் கருதி பெற்றோரின் கைபேசி இலக்கங்கள் இணைக்கப்பட்ட வட்ஸ் அப் குழுக்கள் உருவாக்கப்படவேண்டுமென மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் வகுப்பு ரீதியாக வட்ஸ் அப் குழுக்கள் உருவாக்கப்பட்டு மாணவிகளின் பெற்றோரின் கைபேசி இலக்கங்கள் இணைக்கப்பட்டு, வகுப்பு ஆசிரியைகளால் கையாளப்பட வேண்டும் என்றும், மாணவிகள் தொடர்பான அவதானிப்புக்கள் அதில் பதிவிடப்படவேண்டும்என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதின்ம வயதினர் தொடர்பான குற்றங்களைக் குறைக்கும் நோக்கில் இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், மாணவிகள்பாடசாலைக்குசமுகமளிக்காவிட்டால் உடனடியாக இந்தக் குழுக்கள் ஊடாக பெற்றோருக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும், மாணவிகள் பாடசாலைக்கு வரும் வாகன விவரங்கள், சாரதிகளின் கைபேசி இலக்கங்கள் போன்றவையும் இந்தக் குழுக்களில் பகிரப்பட வேண்டும்என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த நடைமுறையைஉடனடியாக நடைமுறைக்குக்கொண்டுவரவேண்டும் என்றும் குறித்த செயற்திட்டம் அந்தந்த பொலிஸ்பிரிவில் உள்ள பொலிஸ்பொறுப்பதிகாரிகளால் மேற்பார்வை செய்யப்படும் எனவும் யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபர்பாடசாலை அதிபர்களுக்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# மலையக ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பின!

கண்டியிலிருந்து பதுளை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த சரக்கு ரயில் எண்ணெய்க் கொள்கலனொன்று நேற்று (வெள்ளிக்கிழமை) காலை தடம்புரண்டதால் மலையக ரயில்சேவைகள்பாதிக்கப்பட்டிருந்தன.

எனினும், நேற்று மதியம் 2 மணியளவில் ரயில் பாதையை சீர் செய்துள்ளதோடு, மலையக ரயில் சேவை வழமைக்கு மாறியுள்ளதாக நானுஓயா ரயில் கட்டுப்பாட்டுநிலையம் தெரிவித்துள்ளது.

தலவாக்கலை மற்றும் வட்டகொட ஆகிய புகையிரத நிலையங்களுக்கு இடையில் 118 ேமைல் பகுதியிலேயே இவ்வாறு தடம் புரண்டிருந்தமை குறிப்பிடதக்கது. (05)







யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் கொண்டாட்டம்
Tourism Northern Province
இணைந்து வழங்குவோர்
Visit North
Experience the Hospitality
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
happymarket.lk
அல்லங்காடி கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILE zone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்